# பொன் விலங்குகள்

நாடகப் பேராசிரியர்

## ராவ் பகதூர்

## ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்,

அவர்களால் தமிழில் இயற்றப்பட்டது.

**இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நூல்கள் :—**

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், கதம்பம், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளி மணம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் முதற்பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம், நான்காம் பாகம், ஐந்தாம் பாகம், ஆறாம் பாகம், நாடகத் தமிழ், யயாதி, பிராமணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வாத்தியார், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவ தெப்படி!, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், முதலியன.

மூன்றாம் பதிப்பு

இரத்தின விலாஸ் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

காபிரைட்] 1945 [விலை அ[redacted]

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

# பொன் விலங்குகள்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| கனகசபை ஐயர் | .... | சப் ஜட்ஜ் வேலையிலிருந்து பென்ஷன் வாங்கிக்கொண்டவர் |
| ராமசந்திரன் | .... | கனகசபை ஐயர் குமாரன், பங்கஜ வல்லியின் கணவன் |
| சாமிநாதன் | .... | பங்கஜவல்லியின் தமயன் |
| சென்னகேசவ முதலியார் | | ராஜதானிக் கலாசாலைத் தமிழ் உபாத்தியாயர் |
| மாணிக்கம் | .... | சென்னகேசவ முதலியார் பேரப் பிள்ளை |
| கிருஷ்ணன் | .... | ராமச்சந்திரன் வேலையாள் |
| கோபாலகிருஷ்ண நாயுடு | .... | ஒரு பழய திருட்டு ஆசாமி |
| ராமானுஜ முதலி, வெங்கடாசலம் பிள்ளை | .... | வேலூர் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்ட திருடர்கள் |
| சுந்தரராஜன் | .... | ஹெட் கான்ஸ்டபில் |
| நாராயணசாமி முதலி | .... | ஒரு கான்ஸ்டபில் |
| பங்கஜவல்லி | .... | ராமச்சந்திரன் மனைவி |
| மீனுக்ஷி | .... | பங்கஜவல்லியின் அத்தை |
| மங்கைத்தாய் | .... | பங்கஜவல்லியின் வேலைக்காரி |
| மிஸ் ரோஸ் கமலா | .... | ஒரு கிறிஸ்தவப் பெண் |

---

கதை நிகழிடம்:—சென்னையில் கடற்கரையிலும், எழும்பூரிலும், புரசைவாக்கத்திலும், ராஜா சர் ராமசாமி முதலியார் சத்திரத்திலும், ரெயில் ஸ்டேஷனிலுமாம்.

காலம்—தற்காலம்.

# பொன் விலங்குகள்

## முதல் அங்கம்

---

### முதல் காட்சி

*இடம்—சென்னை கடற்கரை. காலம்—சாயங்காலம்.*

*ராமசந்திரன் வருகிறன்*

ரா. இன்னும் பத்து விடிை யிருக்கிறது. இன்னும் ஒரு முறை உலாவுவோம். [உலாவுகிறன்.]

சரியாக ஆறு மணி! இன்னும் ஏன் வரவில்லை? இந்தியர்களுக்குக் காலக்கிரமம் என்பது ஜன்மத்திலேயே கிடையாது; இன்னும் எத்தனை நூற்றண்டுகள் கழித்து வருமோ? பத்து நிமிஷம் பொறுத்துப் பார்க்கிறேன். அதற்குள் வராமற்போனல் பெரம்பூருக்கு நான் நேராய்ப் போகவேண்டியதுதான். [உலாவுகிறன்.]

*சென்னகேசவ முதலியார் வருகிறர்.*

சே. ஆ!—ராமசந்திரன்!

ரா. யார் அது?—ஆ!—வாருங்கள்! வாருங்கள் உபாத்யாயர்!—வாருங்கள்! நிரம்ப நாளாச்சுது பார்த்து—என்னவிசேஷம்?

சே. ஒன்றுமில்லை. உன்னைப் பார்க்கவேண்டுமென்று உன் வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கே உன் தகப்பனர் இங்கே போனல் உன்னைப் பார்க்கலாமென்று சொன்னர், உடனே புறப்பட்டு வந்தேன்.

ரா. என்ன விசேஷம்? அவசரமான விஷயம் ஏதாவதுண்டோ?

சே. ஒன்றும் விசேஷமில்லை. உன்னைப் பார்த்து நெடு நாளாயிற்றே, பார்த்துவிட்டுப் போகலாமென்பதுதான், வேறென்றுமில்லை.

ரா. எனக்குக் கொஞ்சம் வேலை யிருக்கிறது, ஏதாவது விசேஷமிருந்தால் சீக்கிரம் சொல்லும்.

சே. ஒன்றுமில்லை—நீ வயித்தியப் பரீக்ஷையில் இந்த வருஷம் முதலாகத் தேறினதாகக் கேள்விப்பட்டேன்.

ரா. ஆம்.

சே. நிரம்ப சந்தோஷம்.— அதுதான் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

ரா. வேறென்ன விசேஷம்?

சே. இல்லை.—நீ ஏதோ க்ஷய ரோகத்திற்குப் புதிதாய் ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறாயாமே?

ரா. ஆம்.

சே. ஏ—உங்கள் தகப்பனாரைப் பார்த்தேன். அவருக்குங் கூட ஏதோ-கொஞ்சம்-க்ஷயமுண்டு போலிருக்கிறது.

ரா. கொஞ்சம் என்ன? மூன்று வருஷமாக அவருக்கு இந்தத் தொந்திரவு உண்டு.—அதிருக்கட்டும். சமாசாரமென்ன எதற்காக இதெல்லாம் கேட்கிறீர்? நேராகக் கேட்கிறதுதானே?

சே. இல்லை, நான் அவசரமாகப் பார்க்க வந்தது—என் தம்பி ஒருவ னிருக்கிறான். அவன் இந்த க்ஷயத்தினால் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறான். இங்கிலீஷ் வைத்தியம், தமிழ் வைத்தியம், யுனானி வைத்தியம் எல்லாம் பார்த்தேன். இனி பிழைப்பது கஷ்டம் என்று எல்லோரும் கைவிட்டார்கள். இன்றைத்தினம் அகஸ்மாத்தாய் சுதேசமித்திரன் பத்திரிகையில், உன்னைப் பற்றி, நீ யேதோ இந்த க்ஷயத்திற்கு புதிய மருந்தொன்று கண்டுபிடித்திருப்பதாயும், அதை சீமையிலுள்ள வைத்தியர்கள் கூட புகழ்ந்திருப்பதாயும் வாசித்தேன். நம்மிடத்தில் படித்துத் தேறின பிள்ளையாயிற்றே, நேரிற் போய்ப் பார்க்கலாமென்று வந்தேன். என் சமாசாரமெல்லாம் உனக்கு நன்றாய்த் தெரியும். —சொற்ப ஜீவனம்—

ரா. அதைப்பற்றி யாரும்மைக் கேட்டது?—எங்கே யிருக்கிறார் உம்முடைய தம்பி?

சே. என் வீட்டில்தானிருக்கிறான், ஆறு மாதமாக—

ரா. நாளைத்தினங் காலை ஏழு மணிக்கு நான் வந்து பார்க்கிறேன். திருவல்லிக்கேணியில் உம்முடைய பழய வீட்டில்தானே இருக்கிறீர்?

சே. ஆம்,— கொஞ்சம் — வீட்டிற்குப் போகும்பொழுது இன்றிரவு வரமுடியாதோ?

ரா. இல்லை, எனக்குக் கொஞ்சம் வேலை யிருக்கிறது—

*ஒருபுறமாக மிஸ் கமலா வருகிறாள்.*

நாளை காலை அவசியம் பார்க்கிறேன்.

சே. அவனை உன் கையில் ஒப்புவிக்கிறேன். எப்படியாவது—

ரா. சரிதான், நீங்கள் வாருங்கள். நாளை காலை வருகிறேன்.

சே. ஞாபகமிருக்கவேணும். [போகிறார்.]

ரா. கமலா, என்ன இத்தனை நேரம் பொழுத்து வந்தாய்?

கம. என்ன மணி?—ஆறு, நாலு,—வழியில் கொஞ்சம் வேலை யிருந்தது.

ரா. என்ன வேலை?

கம. தகப்பனார் கொஞ்சம் கற்பூரப் பில்லைகள் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார்; அதற்காக—

ரா. கற்பூரப் பில்லைகளுக் கென்ன அவசரம்?

கம. எங்கள் தோட்டத்துப் பக்கத்துத் தோட்டத்தில் இரண்டு பெயர் வாந்தி பேதியில் இறந்துபோனார்கள் காலை. ஆகவே வீட்டில் ஒவ்வொருவரும் கற்பூரப் பில்லை ஒன்று எந்நேரமும் கையில் வைத்திருக்க வேண்டுமென்று உத்தரவு பண்ணினார். அதற்காக—

ரா. என்ன புத்தியின்மை! இதிலெல்லாம் என்ன இருக்கிறது? சாப்பிடும் சாப்பாட்டிலும் குடிக்கும் ஜலத்தி

னும் ஜாக்கிரதையா யிருந்தால் ஒன்றும் பயமில்லை.— அதிருக்கட்டும். என்னுடைய கடிதம் வந்து சேர்ந்ததா?

கம. சேர்ந்தது.

ரா. உன் தகப்பனருக்குக் காண்பித்தாயா? அவர் என்ன சொன்னர்?—என்ன சும்மா இருக்கிருய்? அவர் என்னதான் சொன்னர்? எதுவாயினும் என்னிடம் சொல்!

கம. இதற்குள்ளாக—உனக்கென்ன—கலியாணம்?—இன்னும் ஒரு வருஷம் போகட்டும்—இதற்குள் உன்னுடைய எல். எம். எஸ். பரீக்ஷையும் ஆகட்டும்.—அப்புறம் யோசிக்கலாமென்று சொன்னர்.

ரா. ஊம்—அவ்வளவுதான?—கமலா, என்னிடம் ஏதோ மறைக்கிருய். இன்னும் என்ன சொன்னர் சொல், ஒன்றும் பயப்படவேண்டாம்.

கம. அதோ யாரோ வருகிருர்கள் இந்தப் பக்கம்.

ரா. அந்தக் கல்லின்மீது உட்காருவோமா?

*பங்கஜவல்லியும், மீனுக்ஷியும் வருகிறார்கள்.*

கம. இல்லை. இந்தப் பக்கம் நடந்துபோவோம் இன்றைக்கு.

ரா. வா, ஆனல், [இருவரும் பேசிக்கொண்டு போகிருர்கள்.]

மீ. என்னடி அது? இன்னும் எத்தனெ தூரம் என்னெ இழுத்துண்டு போகப்போறெ?—அம்மா அடி! இதோ பாரு, தடுக்கிவிழப் போனேன்! இந்தப் பாழும் சாலே சரம் வந்து எங் கண்ணுந் தெரியலே!

ப. என்பேரில் கோபித்துக்கொள்ளாதே அத்தெ; இதோ வந்துவிட்டோம், எனக்கும் இளைப்பா யிருக்கிறது. அந்தக் கல்லின்மீது சற்று உட்கார்ந்து போவோம் நேற்றைத்தினம்போல்—

மீ. ஒக்காந்து விடிஞ்சுது பொ! இந்தக் காலத்துப் பசங்களுக்குக் கொஞ்சமாவது வெக்கஞ்சிக்கம் உண்டா?

இங்கே புருஷா கிருஷா வருவா! இங்கே ஒக்கார்ரதாவது? அந்தப்பாழும் வைத்யன் ஒருத்தன் சமுத்திரக் கரைக்கி உன்னெ சாயங்காலம் போகச் சொன்னுலுஞ் சொன்ஞ, ஒனக்கு கொண்டாட்டமாச்சு, எனக்குத் திண்டாட்டமாச்சு!

ப. இல்லே, அத்தெ; இங்கே யெல்லாம் உட்கார்ந்தால்—புருஷாள்—யாராவது வருவார்கள் என்றுதானே—ஒரு புறமாய் செடி மறைவாய்—அந்தக் கல்லின்மீது உட்காருவோமென்று சொல்லுகிறேன். கோபித்துக் கொள்ளாதே.

மீ. எனக்கு கோபம் ஒண்ணு? வாடியம்மா வா. மடியிலெ நெருப்பெ கட்டிண்டு வச்சிருக்கேன், எப்போ ஒம் புருஷன் கையிலெ ஒன்னெ ஒப்பிப்பேனே?—என்னெ கையெ புடிச்சு யிட்டுண்டு போ. இருட்டிப் போச்சு, கண்ணு ஒண்ணுந் தெரியலே, தடுக்கி விழப்போரேன் மறுபடியும்.

ப. ஒரு கண்ணுடி போட்டுக் கொள்ளுகிறது தானே அத்தெ?

மீ. ஆமாம்! கன்னுடி ஒன்னு! கன்னுடி ஒன்னுதான் கொறச்சல்! மூக்குக்குக் கன்னுடி ஒன்னு போட்டுண்டு கையிலெ ஒரு தடியெ புடிச்சுண்டு நடக்கச் சொல்லுநாளே! இந்தக் காலத்துப் பசக படிச்சி படிச்சி என்ன கெட்டுப் பூட்டுதுக!

[பங்கஜவல்லி மறைவா யிருக்கும் ஒரு கல்லாசனத்திற்கு அழைத்துக்கொண்டுபோகிருள்.]

*ராமசந்திரனும், கமலாவும் திரும்பி வருகிறார்கள்.*

கம. உம்முடைய மதத்தில் உமக்கு நம்பிக்கை யில்லேயென்று சொல்ல வில்லேயா நீர்?

ரா: அதில் நம்பிக்கை யில்லாவிட்டால் கிரிஸ்துவ மதத்தில் நம்பிக்கை யுண்டாகிவிடுமோ?

கம. நீங்கள் எங்களுடைய வேத புஸ்தகத்தை வாசித்திருக்கிறீரா?

ரா. வாசித்தால்?

கம. கர்த்தர் அருளால் உமக்கு ஞானமுண்டாகும்.

ரா. இப்போது ஞானமில்லா திருக்கிறேனே? இதெல்லாம் உனக்கு யார் கற்பித்தது? உன் சிற்றப்பா பாதிரியாரோ?—நான்தான் உனக்கு அநேக முறை சொல்லியிருக்கிறேனே; இந்த உலகத்தில் எனக்கு எந்த மதத்திலும் நம்பிக்கையில்லை—ஸ்வாமியென்று ஒருவர் இருப்பதாக என் அறிவிற்கு ரூபிக்கப்படும் வரையில் நான் இப்படியேதான் காலம் கழிப்பேன், எனக்கு எல்லா மதமும் ஒன்றுதான்.

கம. எல்லா மதமும் ஒன்றானால் இப்பொழுது இந்து மதஸ்தர் என்று பெயர் வைத்துக்கொண் டிருப்பதுபோல் கிரிஸ்து மதஸ்தர் என்று பெயர் வைத்துக்கொள்கிறது தானே?

ரா. நல்ல நியாயம்!—அதிருக்கட்டும். உன் தகப்பனார் இன்னொரு ஆக்ஷேபனை சொன்னதாகச் சொன்னாயே, அது என்ன?

கம. அது—

ரா. என்ன? சொல், எதுவா யிருந்தபோதிலும் எனக்கொன்றும் கோபம் வராது, சொல்.

கம. உங்களுக்கு—முன்பே—ஒரு கல்யாண மாயிருக்கிறதாமே?

ரா. உம்- யார் சொன்னது உனக்கு?

கம. என் சிற்றப்பா.

ரா. உம்—எப்பொழு தாச்சுது என்று சொன்னாரா?

கம. அதைச் சொல்ல வில்லை.

ரா. புத்திசாலி அவர்!—கமலா, நான் சொல்வதைக் கேள், கலியாணம் என்பது இன்னது என்று அறியாது நான் சின்ன பையனாய் விளையாடிக் கொண்டிருந்த காலத்தில் பொம்மைக் கலியாணம் செய்வதுபோல் கிழங்களெல்லாங்கூடி ஏதோ செய்துவைத்தால், அதை நான் ஒப்புக்கொள்வேன் என்று எண்ணுகிறாயா?—அதை நான் ஒப்புக்கொள்ளமாட்டே னென்று என் தகப்பனாரிடம் அப்பொழுதே சொல்லிவிட்டேன்.

கம. நீர் சொல்லிவிட்டாலென்ன ?

ரா. உன்னை நான் ஒரு கேள்வி கேட்கிறேன். உன் தகப்பனார் உன்னிடம் வந்து, "நீ கைக் குழந்தையா யிருந்த பொழுது உன்னை கூன் குருடு செவிடா யிருக்கும் ஒரு முடவனுக்குக் கலியாணஞ் செய்து கொடுத்துவிட்டேன், ஆகவே அவன்தான் உனக்கு இப்பொழுது புருஷன்." என்று சொன்னால் நீ ஒப்புக்கொள்வாயா? உண்மையைச் சொல்.

கம. மாட்டேன்,—அப்படிச் செய்யமாட்டாரே என் தகப்பனார். அதுதான் உங்களுக்கும் கிரிஸ்துவர்களாகிய எங்களுக்கும் வித்யாசம்.

ரா. மறுபடியும் பழைய கதைக்குப் போகிறாயே! மதத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?—என் கடைசி வார்த்தையைக் கேள். நீ யென்னைக் கலியாணம் பண்ணிக் கொண்டாலும் சரி, கொள்ளாவிட்டாலும் சரி, கிழங்களெல்லாங் கூடி என் தலையில் கட்டின அந்தச் சனியை மாத்திரம் என்பெண்சாதியாக நான் கனவிலுங் கருதமாட்டேன்.

கம. நீர் கருதாவிட்டா லென்ன? சட்டப் பிரகாரம் அப்பெண் உம்முடைய பெண்சாதிதானே ?

ரா. பார்ப்போம் அந்தச் சட்டத்தை!—அந்தச் சனியன் எனக்கு வேண்டாமென்றால் சட்டம் என்னை என்ன செய்கிறதோ பார்ப்போம்!

கம. அதென்ன சப்தம் இச் செடிகளுக் குள்ளாக?—ஓ!—யாரோ இருக்கிறார்கள் அங்கே! நாம் போவோம் இந்தப் பக்கம்.

ரா. ஆம், ஆம். [போகும் பொழுது]
எனக்கென்ன பதில் சொல்லுகிறாய் ?—இப்பொழுதாவது—

கம. நான்—தகப்பனாருடன்—கலந்து—பேசி—நாளைக்கு—காலை— [இருவரும் போகிறார்கள்.]

*பங்கஜவல்லி மீனாக்ஷியை அழைத்துக்கொண்டு விரைவில் வெளியே வருகிறாள்.*

மீ. இதென்னடி விந்தையாயிருக்கு!—நீ வந்த அவசரமென்ன, இப்போ ஆத்துக்குப் போவமின்னுண்ர அவசரமென்ன?—இதேண்டி ஒங் கை நடுக்குறது இப்படி?

ப. இல்லை, அத்தெ எனக்குக் குளிர் எடுக்கிறது.—ஜ்வரம் போல் இருக்கிறது. ஆத்துக்குச் சீக்கிரம் போவோம் வா.

மீ. அப்பவே சொன்னேனே கேட்டையா? இதுக்கு இங்கே வருவானே? நம்ம வண்டியிலேயே சொகம்மா ஒக்காந்துக்கினு இருக்கக்கூடாதா?—பெரியவா சொன்ன,கேட்டா அன்னே! வேணும், வேணும்! [போகிறார்கள்]

காட்சி முடிகிறது.

## முதல் இடைக் காக்ஷி.

*இடம்— ராஜாராமசாமி முதலியார் சத்திரம். காலம்—மாலை.*

*ராமானுஜ முதலி, வெங்கடாசல பிள்ளை, நாராயணசாமி முதலியுடன் வருகிறார்கள், மாணிக்கம் கார்பெட் பாக் ஒன்று கையி லெடுத்து வருகிறான்.*

வெ. என்னண்ணு அது, தண்டோரா போட்டாங்களே?

நா. வேலூர் ஜெயில்லே யிருந்து ரெண்டு கயிதிங்க தப்பிச்சிக்கினு வந்துட்டாங்களா. அவங்களெ கண்டுபுடிச்சி கொடுக்கிறவங்களுக்கு இரநூறு ரூபாய் எனும் கொடுக்கிறாங்களாம்.

வெ. அவுங்க—என்ன—தப்பிச்சிக்கினு, இங்கையா—பட்டணத்துக்கா வந்தூட்டாங்களாம்?

நா. ரெயிலேறி பட்டணத்துக்கு பொறப்பட்டுட்டதா சமாசாரம் வந்திருக்குது.

வே. சர்தான். [நாராயணசாமி மாணிக்கத்துடன் உள்ளே போகிருன்.]

[ஒருபுறமாய்] அந்தமுட்டும் ஆசாமி நம்மே கண்டுபிடிக்கலே. எங்கே கண்டுபிடிச்சூட்ராஞே இண்ணு ரொம்ப பயந்தேன்.

ரா. அதெல்லாம் இருக்கட்டும். இனிமேலே நம்ப சென்னப்பட்டணத்திலே இருக்ககூடாது. ஒடனே எங்கே யாவது துருப்பு பிடிக்கணும். இல்லாப்போஞ இந்த பயர்பாக்சுங்க கிட்ட ஆப்புட்டுக்குவோம்.

வே. ஆமாம், கையிலே எதுக்கும் பணமில்லேயே! எங்கே யாவது ஒரு அஞ்சி ரூபா கெடச்சா போதும்.

ரா. வேறே வழியில்லே. அந்த திருப்பதியிலே யிருந்து வந்ததா சொன்ஞனே, பட்டெ நாமம், அவன் ஜேபி யிலே பை யிருக்கராப்போலே யிருக்குது. அத்தெ மொள்ள தபாய்ச்சுடணும்.

வே. ஆமாம், நீ போ அந்தபக்கம் சீக்கிரம். அதோ வர்ரான் ஆசாமி.

[ராமானுஜ முதலி விரைந்து போகிருன்.]

மற்ரெரு புறமாக கோபாலகிருஷ்ண நாயுடு ஒரு டபி சஞ்சியை கையில் எடுத்துக்கொண்டு மெல்ல வருகிருன்.

வாங்க! அண்ணு! சாப்பிட்டாச்சா? ரெயிலுக்குப் பொறப்புட்டாப்போலே யிருக்குது? மறுபடியும் எப்போ பாக்கறது? கொஞ்சம்—பொடி யிருந்தா கொடுங்கோ.

[கோபாலகிருஷ்ண நாயுடு பொடி டப்பியை எடுத்து திறந்து கொடுக்கும் பொழுது ராமானுஜ முதலி எதிர்ப் புறமாக விரைந்து வந்து அவன் ஜேபியில் கையைப் போடுகிருன்.]

கோ. [அவன் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு] அப்பேன்! கொஞ்சம் பொறு! அவசரப்படாதே!

ரா. யாரையா அது? என் கையே ஏன் ஐயா புடிக்கிறிங்கோ? உடையா கையே!

கோ. இந்த கை என் ஜோபியிலெ ஏன் போச்சி?

ரா. ஏய்! யார்வே நீ? என்னே யென்ன சோதா பையென் இண்ணு நெனச்சிக்கிஜேயா? நான் என்ன முடிச்சி மாறியா? ஒன் ஜோபியிலே நான் எங்கெவே கை போட்டேன்? உடுரையா என்ன எங் கையே?

வெ. என்ன அண்ணு! அவரு பெரிய மனுஷரு! அவரே அப்படி கேக்கரைங்களே!

ரா. என்னவே அது! உடுரையா கையே, போலீஸ்காரனே கூப்பிடணுமோ?—அடே யாரடா அது? கூப்பிட்ரா போலீஸ்காரனே!

கோ. உம்—அப்புறம்?

வெ. என்ன ஐயா அது! உனக்கென்ன பயித்தியம் கியித்தியம் புடிச்சி யிருக்குதா என்ன? நான் பாத்துக்கினு இர்க்கிரே, அவர் எங்கே ஐயா உன் ஜோபியிலே கை போட்டாரு! என்ன டாணக்காரனே கூப்பிடணுமோ? உடுவே கையே! [தப்பிவைக்கப் பார்க்கிருன்.]

கோ. [அவனையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு] ஓ! நெனச்சேன்! நெனச்சேன்! டாணக்காரனேயா கூப்பிடப் போறிங்கோ? கூப்பிடுங்கடாப்பா? எனக்கு இரநூறு ரூபா கிடைக்கும், சீக்கிரம் கூப்பிடுங்கோ.

ரா. வெ. ஐயா! ஐயா! ஐயா! ஒங்க காலே புடிச்சிக்ரோம். சொல்லாதைங்கையா! சொல்லாதைங்கையா!

கோ. அதெல்லாம் ஒதவாது! எனக்கே வழி வைச்சிங்களே! ஏண்டா?

வெ. இல்லையா! இல்லையா! எங்களே நீங்கதாங் காப்பாத்தணும், எங்க உயிர் உங்க கையிலே இருக்குது.

ரா. நீங்க என்ன சொன்னலும் செய்யரோம், கொஞ்சம் மன்னிச்சி உட்டுடுங்கையா எங்களே! உங்க மோக்கட்டெயெ புடிச்சிக்கிரோம் ஐயா!

கோ. ஆனல், உங்க கையிலே இருக்கிறத்தெ யெல்லாம் கொடுத்துடுங்கோ.

வெ. அண்ணு! எங்க கையிலே தம்படி கூட இல்லே அண்ணு!

கோ. அடே! நம்பகிட்ட இதெல்லாம் வாணும்! நம்ப யார் தெரியுமா! காட்டாளி கோபாலன் இண்ணு கேட்டிருக்கிறைங்களா?

வெ. அடே நானு அப்பவே சொல்லலே!

கோ. அதெல்லாம் இருக்கட்டும். இருக்கிறத்தெயெல்லாம் கொடுத்தூட்ரைங்களா? இல்லாப்போனு டாணுக்காரன் கிட்ட ஒப்பிச்சூடவா? அந்த இரநூறு ரூபாயே கொடுத்துடுங்க, உட்டூட்றேன் சும்மா.

ரா. அண்ணு! நீங்க என்னுவோணுமிண்ணுலும் சோதனே போட்டுகுங்க! எங்ககிட்ட, சத்தியமா, எங் கப்பாணே! ஒரு காசுகூட கிடையாது.

கோ. அந்த மூட்டையிலெ என்னு இருக்குது?

வெ. [மெல்ல] எங்க ஜெயில் உடுப்பு! அத்தே மொள்ளமா எங்கேணுலும் போட்டூடலாம் இண்ணு பார்க்கிரோம். சமயம் ஆப்பிடலே. ரெயில் சார்சி ஆப்டா எங்கேயாவது ஓடிப்போய் மொள்ள இத்தே கொளித்தூடலாம் இண்ணு பாத்துதான் உங்க ஜோபியிலேயிருந்து பையே திருடப் பார்த்தோம். அண்ணு! நீங்கதாம் எப்படியாவது எங்களே காப்பாத்தணும்—அண்ணு! எங்களேமாத்திரம காப்பாத்திடுங்க. உங்க காலுங் கீழே அடிமையா ஒழைக்கிரோம்.

கோ. அப்படியே ஆவட்டும். நான் சொன்னபடி கேளுங்க! ஒண்ணும் பயப்படாதிங்க.

[மாணிக்கம் உள்ளே யிருந்து வெளியே வருகிருன்.]

அடே பையா, எங்கெடா அவரு டாணுக்காரு?

மா. குளிக்கிரரு.

கோ. முக்காலணுவுக்கு போதாது வெத்திலே?— அடே பையா, இந்தா, ஒரணு இருக்குது, அந்த கடையிலே போய் முக்காலணுவுக்கு வெத்திலே வாங்கியா; மீதி காலணு நீ எடுத்துக்கோ.

மா. இந்த பையே பாத்துக்கினு இருக்கச் சொன்னரே அவரு.

கோ. இந்த பையே இப்படி கொடு,—நாங்க பாத்துக்கிறோம்—நல்ல ரவேசு வெத்திலேயா பொறுக்கி வாங்கியா.

[மாணிக்கம் ஒரு அணாவை வாங்கிக்கொண்டு போகிறான்.]

சீக்கிரம் அதைத் திறந்து உன் மூட்டையை அதிலே போட்டு சாத்திடு!

[ராமாநுஜ முதலி அதனுள் இருக்கும் டாணாக்காரன் உடுப்பை எடுத்துக்கொண்டு தன் மூட்டையை அதனுள் வைத்துவிடுகிறான்.]

வாங்க சீக்கிரம், இன்னும் மூணு நிமிஷம்தானிருக்குது ரெயில் பொறப்பட.

[விரைந்து போகின்றனர்.]

*ஹெட் கான்ஸ்டெபில் சுந்தரராஜன் வருகிறார்*

சுந். அவுங்களாத்தா இருக்கவேணும்—சந்தேகமில்லே.

*மாணிக்கம் வெற்றிலே வாங்கிக்கொண்டு வருகிறான்.*

மா. ஐயா,—எங்கே அவுங்க? ஒருத்தரையுங் காணோம்—அந்த மூட்டும் பையே வைச்சூட்டுப் போனாங்களே.—ஐயா! [கூப்பிடுகிறான்.]

சுந். அடே பையா, இங்கே ரெண்டு பேரு சொக்கா தலெப்பா, எல்லாம் போட்டுக்கினு இருந்தாங்களே பாத்தையா?

மா. மூணு பேரு இருந்தாங்களே, அவுங்களையா கேக்றைங்கோ?

சுந். ரெண்டு பேருடா.

மா. இல்லேயா, மூணு பேரு. எங்கிட்ட முக்காலணாவுக்கு வெத்தலே வாங்கியாரச் சொன்னாங்க. அவங்களே காணமே இங்கே—இதோ பாருங்க வெத்தலே.

நா. [உள்ளேயிருந்து] அடே பையா! என் கார்பெட் பாக்கெ கொண்டாடா.

மா. இதோ! [உள்ளே கொண்டு போகிறான்.]

சுந். யார் அது? அடே நாராயணசாமி! இங்கேவா இப்படி. கொஞ்சம் முன்னே நாம்ப தேடர ஆசாமிங்க இந்த

சத்திரத்துக்கு வந்தாங்களாண்டா! நீ என்னமானு பாத்தியா?

நா. [பையனுடன் வெளி வந்து] இங்கே யாரும் வல்லேயா! நான் தான் இங்கே இருக்கரவங்களேயெல்லாம் ஜாக்கிரதையா பார்த்துக்கினு வந்தேனே, மொட்டந்தலே ஒருத்தரையுங் காணும்.—என்னடா பையா, பூட்டு தெறந்திருக்குது!

[கார்பெட் பாக் திறந்திருக்கிறது பார்த்து]

ஏ! என்னுடா இது! என் உடுப்பே காணும்!— ஏண்டா பையா?

மா. இல்லே அண்ணு!—இங்கே மூணுபேரு இருந்தாங்களே, அவுங்க முக்காலணுவுக்கு வெத்தலே வாங்காரச் சொன்னுங்கோ,—இத்தே அவுங்கிட்ட பார்த்துக்கச் சொல்லி வைச்சுட்டுப் போனே. வெத்தலெ வாங்கிக்கினு வந்து பாத்தே. இது மாத்திரம் இர்ந்தது, அவுங்களே காணும்!

சுந். [கார்பெட் பாக்கிலிருந்த இரண்டு கைதிகளின் துணியை எடுத்து] சரிதான்!—மடையா! அவுங்கதான் பழைய ஆசாமிங்களாச்சே! நாமம் போட்டாங்கோ ஒனக்கு, ரெயிலுக்குத்தான் போயிருப்பாங்க. அதோ ஆறு மணி அடிக்குது! சீ! ரெயிலேறிப் போயிருப்பாங்க! வா வா! தந்தியாவது கொடுப்போம்! [விரைந்து போகிருர்கள்.]

முதல் இடைக் காட்சி முடிகிறது.

# இரண்டாம் காட்சி

*இடம்—எழும்பூர். கனகசபை ஐயர் பங்களாவில் ஓர் அறை.*

*காலம்—மாலை.*

*படுக்கையின்மீது கனகசபை ஐயர் சாய்ந்திருக்கிறார்.*

*கதவோரமாக மீனாட்சியம்மாள் நிற்கிறாள்.*

மீ. நீங்க பெரியவா எல்லாத்துக்கும், நீங்க மனசு வைச்சா அல்லாம் முடியாதா? மாப்பிள்ளெ அப்படித்தான் வேண்டாம் வேண்டாம் இண்ணு சொல்லுவாரு. புத்தி யறிஞ்சி ரெண்டு வருஷமாவது ஏறக்கொறைய; அச லாத்துக்காரெல்லாம் என்ன சொல்லுவா? நீங்கதான் சொல்லுங்க, இது நன்னா இருக்கா ஒங்களுக்கு?

க. அவன் வரட்டும்,—வந்தவுடன் பேசிப் பார்க்கிறேன்.

மீ. பேசிப் பாக்கரதாவது? அப்படி சொல்லிவிட்டா எப் படி? அவளுக்கு நேத்தும்புடிச்சி காச்சலா யிருக்கு கொஞ்சம். இண்ணைக்கு சாயந்திரம் அழைச்சிண்டு போறேன் ஊருக்கு. ரெண்டு நாள்ளெ கொஞ்சந் தாவளெயான ஒடனே காயிதம் போட்ரே, நீங்க எப் படியாவது மனசு வச்சி, ஒரு முகூர்த்தம் குறிச்சிண்டு ஒடனே யெழுதணும். ஒடனே அழைச்சிண்டு வந்தூட் றேன்,

க. உடம்பு சவுக்கியமானவுடனே எழுதுங்கள்.

மீ. ஆமாம், நாங்க கடுதாசி எழுதினதா, நீங்களாவது மாப்பிள்ளெயாவது பதில் போட்ரதில்லையே! சாவு வாழுக்கு வந்து போகாவிட்டாலும், கடுதாசி போட்டா பதில்கூடவா போடக்கூடாது? நான் இப்பவே சொல் லிட்டேன். பங்கஜத்துக்கு ஒடம்பு தாவளெயான வுடனே எழுதரேன், ஒடனே நீங்க முகூர்த்தம் குறிச் சி பதில் எழுதாப்போனா, அவளெ அழைச்சிண்டு வந்து ஒங்க ஆத்துலே உட்டுடுவேன். ஒங்க மாட்டுப் பொண்ணாச்சு, நீங்க ஆச்சு—இப்பவே சொன்னேன், அப்புறம் ஒங்க பாடு. என்னெ வையவேண்டாம்.

க. இல்லே. நான் எப்படியும் எழுதுகிறேன்.

மீ. அப்படி கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க. அவளுக்கு யாரு மனுஷா இருக்கரு? அப்பாதான் கட்டிக் கொடுத்த மறு மாசமே பூட்டாரு. தமயன் ஒருத்தன், தாயில்லாப் பொண்ணுச்சே இண்ணு கொஞ்சமாவது யோசிக்காமே, ஜப்பா தேசமோ—என்னமோ எழுவெடுத்ததேசம்- அது என் வாயிலேகூட நொழயலே- அங்கே போயி ஒக்காந்துக்கிறு; நான் ஒருத்தி கம்மிணுட்டி என்று செய்வேன்? இப்பவே சொல்லிட்டேன். எல்லாம் ஒங்க தலெ பாரந்தான். நான் வர்ரேன். நான் சொன்னது காபகம் இருக்கட்டும். ஒடனே காயிதம் மாத்திரம் போடுங்கோ.

க. அடே, யாரடா அங்கே? கிருஷ்ணு!

*கிருஷ்ணன் வருகிறன்.*

இவர்கள் வண்டி கொண்டுவரச் சொல்.

கி. இதோ.

க. அடே, ஏதாவது தபால் வந்ததா எனக்கு?

கி. இதோ பாக்றேன். [போகிருன்]

மீ. நான் வர்ரேன். [போகிருள்]

க. ஆறு மணி யாய்விட்டது. மருந்து சாப்பிடவேண்டிய வேளேயாயிற்றே, ஏன் இன்னும் ராமசந்திரன் வரவில்லே?

*மறுபடியும் கிருஷ்ணன் வருகிறன்,*

கி. இதோ தபால் [மூன்று கடிதங்களேக் கொடுக்கிருன்.]

க. எங்கேடா என் மூக்குக் கண்ணுடி?

கி. இங்கேதான் வைச்சனே. எங்கே, அத்தெ காணேம்!

க. தேடிக் கொண்டுவா சீக்கிரம். [கிருஷ்ணன் போகிருன்.] ஆ! என்ன சங்கடம்! ஒப்புக்கொள்ளப்போகிருனே அவன்?—எங்கேயடா கிருஷ்ணு என் கண்ணுடி?

கி. [உள்ளே யிருந்து] இதாம் தேடிப் பாக்கறனே!

க. உம்— [கடிதங்களேப் பிரிக்கிருர்.]

*மறுபடியும் கிருஷ்ணன் வருகிறான்,*

கி. இதோ கண்ணாடி. [*கொடுக்கிறான்.*]

க. [*அதை வாங்கிப் போட்டுக்கொண்டு கடிதங்களைப் படித்துப் பார்க்கிறார்.*]

ஆ! இதென்ன இது?—கிருஷ்ணா, கீழே கிடக்கும் இந்தக் காகிதத் துண்டுகளை யெடு!

கி. இதோ. [*பொறுக்கிக் கொடுக்கிறான்.*]

க. [*அவைகளை ஒன்றாய் வைத்துப் பார்த்து*] ஆ! இப்படியா இருந்தது?—நினைத்தேன்!—நினைத்தேன்!—பரமேஸ்வரா! பரமேஸ்வரா!

கி. ஆறடிச்சிப் போச்சே, மருந்து சாப்பிடலையா?

க. இருக்கட்டும், கொஞ்சம் பொறுத்து சாப்பிடுகிறேன்—ராமசந்திரன் வந்தானா? [*பைசிகில் மணி ஓசை கேட்கிறது.*]

கி. அதோ! [*விரைந்து போகிறான்.*]

க. வேண்டும் எனக்கு!—என் தகப்பனாரை நான் ஆட்டிய கோலத்திற்கு இதை நான் அனுபவிக்கவேண்டியது தான்! ஈஸ்வரா!—ஈஸ்வரா!

ரா. [*உள்ளிருந்து*] எனக்கு ஒரு காகிதம்கூட வரவில்லையா?

கி. [*உள்ளிருந்து*] இல்லை.

க. சரி! [*காகிதத்தை மறைத்து வைக்கிறார்.*]

*ராமசந்திரன் விரைந்து வருகிறான்.*

ரா. இதோ வந்தேன்.—ஆறு அடித்துவிட்டதா?—அண்ணா, கொஞ்சம் மன்னிக்கவேண்டும். வழியில் ஒரு புஸ்தகம் வாங்கப் போனேன்.—மருந்து சாப்பிட்டாச்சுதா?

க. இல்லை.

ரா. நான் வருவதற்கு எப்பொழுதாவது நாழிகையானால் மருந்தை மணிப்பிரகாரம் சாப்பிடச்சொன்னேனே. சாப்பிடுங்கள் உடனே.

[*மருந்தை கொடுக்கிறான் கனக சபை ஐயர் சாப்பிடுகிறார்.*]

அண்ணா, என்ன கை நடுக்குகிறது இப்படி? எப்படி

யிருக்கிறது உடம்பு உங்களுக்கு ? என்ன ஜ்வரம் வந்ததா என்ன மறுபடியும் ? கையைக் காட்டும்.—

[நாடியைப் பார்க்கிருன்.]

என்ன இது !— [ஹிருதயத்தைப் பரிசோதித்துப் பார்க்கிருன்.]

என்ன ஆச்சரியம் ! [அவசரமாய் ஏதோ எழுதுகிருன்.]
கிருஷ்ணு !

கிருஷ்ணன் வருகிறன்.

இதைக் குதிரைக்காரனிடம் கொடுத்து ஓடிப்போய் மருந்து வாங்கிவரச் சொல், சீக்கிரம் !

[கிருஷ்ணன்போகிருன்.]

க. ராமசந்திரா, என்ன ? என் ஹிருதயத்தில் ஏதாவது கெடுதியா யிருக்கிறதா ?

ரா. இல்லே.—மத்யானம் சரியாகச் சாப்பிட்டீரா ?

க. சாப்பிட்டேன், ராமசந்திரா, என்னிடம் ஒன்றும் ஒளியாதே. என் ஹிருதயத்திற்கென்ன ? நான் ஒன்றும் பயப்படமாட்டேன், சொல்.

ரா. இல்லே, அது ஒரு மாதிரியாக இருக்கிறது. என்ன ஆச்சரியம் ! காலே நான் பார்த்தபொழுது நன்ருய் யிருந்தது ! இதற்குள்,—உம்—உங்களுக்கு என்னமா யிருக்கிறது உடம்பு ?

க. மத்யானம் முதல் ஒருவாருய்த்தா னிருக்கிறது.—

ரா. ஏனப்படி ? ஏதாவது காரண மிருக்கவேண்டுமே ? உம்முடைய முகம் ஒருவாரு யிருக்கிறது. அண்ணு உம்முடைய மனத்தில் ஏதோ இருக்கிறது. இன்னதென்று சொல்லும். [சமீபமாய் உட்காருகிருன்.]

க. மத்யானம் தூங்கும்போது—அது கனவுதான் என்று நினைக்கிறேன் — உன்னுடைய தாயார் என்னே அழைத்ததுபோல்—கனவு கண்டேன்.

ரா. [எழுந்திருந்து] இதென்ன அண்ணு ? இதற்காக வெல்லாம் கவலேப்படலாமா ? கனவிலென்ன இருக்கிறது ? உம்முடைய உடம்பு எல்லாம் சௌக்கியமாய்விடும். ஒன்றும் பயப்படவேண்டாம்.

க. நான் ஒன்றும் பயப்படவில்லை யிதற்கெல்லாம்.—நான் இன்னும் அதிக நாள் உயிருடன் இருக்கமாட்டேன் என்று எனக்குள் ஏதோ தோற்றுகிறது. ஈஸ்வரன் விதித்தபடி யாகிறது. [பெருமூச்சு விடுகிருர்,]

ரா. அப்படித்தா னிருக்கட்டும். அதற்காக நீர் கவலைப்படுவானேன்?

க. வேறொன்றுங் கவலையில்லை.—ராமசந்திரா, என் னருகில் வா இப்படி நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன், அதன்படி செய்கிறதாக வாக்களிக்கிருயா?

ரா. அண்ணா நான் சொல்வதைக் கேளும். உமக்கிருக்கிற உடம்பில் மனத்தில் ஒரு கவலையும் கூடாது. நிம்மதியாயிருக்கவேண்டும்.

க. என் மனதில் பெருங்கவலை யொன் றிருக்கும்பொழுது நான் எப்படி நிம்மதியா யிருப்பேன்?

ரா. [சமீபமாய் உட்கார்ந்து] அது என்ன கவலை?

க. நான் சொல்கிறபடி செய்வதாகச் சொல். அதைச் சொல்கிறேன்.

ரா. என்னுல் முடியுமான காரியமானுல் எப்படியும் செய்கிறேன்.

க. உன்னுல் முடியாத காரியத்தை உனக்குச் சொல்வேணு?

ரா. ஆனுல் சொல்லும், அப்படியே செய்கிறேன்.

க. எனக்குப் பிற்காலம்—என் கர்மங்களை யெல்லாம்—நீயே—உன் கையால்—எனக்குச் செய்வதாக வாக்களிக்க வேண்டும்.

ரா. [எழுந்திருந்து] இவ்வளவுதானு? என்னவோ கேட்கப் போகிறீர் என்றல்லவோ எண்ணினேன். அப்படியே ஆகட்டும். இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை யில்லாவிட்டாலும் அப்படியே செய்கிறேன், உம திஷ்டப்படியே. ஆயினும் இதையெல்லாம்பற்றி இப்பொழுது உமக்கு யோசனையேன்? நீர் ஒன்றும் அஞ்சவேண்டாம். உடம்பு உமக்கு சீக்கிரம் சௌக்கியமாய்விடும்.

க. நான் நினைக்கவில்லை—உம்! [பெருமூச்சு விடுகிறார்.] எத்தனை நாளிருந்தாலும் ஒரு நாள் போகவேண்டியவன்தானே.

ரா. எல்லோரும் போகவேண்டியவர்கள்தான். சாஸ்வதமா யிருக்கப்போகிறவர்கள் யார்?—அடே கிருஷ்ணா! போனாயா மருந்துக்கு?

க. நீ சொன்னதுமாத்திரம் ஞாபகமிருக்கட்டும்.

ரா. அண்ணா, உம்முடைய மனத்தில் இன்னும் ஏதோ இருக்கிறது. ஒன்றும் ஒளியாது என்னிடம் அதைக் கூறும். நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

க. ஆம், இன்னொன்று இருக்கிறது. அதைக் கூறுமுன், நான் செய்த ஒரு தப்பிதத்திற்காக உன்னை மன்னிப்பு கேட்கவேண்டியிருக்கிறது.

ரா. அண்ணா, என்ன விளையாடுகிறீரா? நீர் தப்பிதம் செய்வதாவது, என்னை மன்னிப்பு கேட்பதாவது?

க. கொஞ்சம் முன்பாக எனக்கு வந்த கடிதங்களுடன் உன்னுடைய கடிதம் ஒன்றையும் கிருஷ்ணன் கொண்டுவந்து கொடுத்தான். அவசரத்தில் என் மூக்குக் கண்ணாடி யில்லாமல் அதன் மேல் விலாசத்தைப் பாராமல் பிரித்துவிட்டேன். பிறகு உள் ளிருந்த கடிதத்தைப் படித்தபின் எனக்குத் தெரிந்தது, உனக்கு வந்த கடிதமென்று—நான் வேண்டுமென்று படித்துப் பார்த்தவனல்ல—

ரா. எங்கே அந்த கடிதம்?

க. இதோ [கடிதத்தைக் கொடுத்து] இதோ அந்தக் கிழிந்த துண்டுகள்.

ரா. [அவசரமாய்க் கடிதத்தைப் படித்துப் பார்த்து] ஓ!—சரிதான், அண்ணா, நான் ஒரு வார்த்தை சொல்கிறேன், கேளும். உமக்கு இப்பொழுது மனக் கவலை யென்பதே கூடாது. உம்மீது எனக்குக் கோபமு மில்லை, வருத்தமு மில்லை, நானே இதைப்பற்றி உம்மிடம் கூறி, உம்முடன் யோசிக்கவேண்டுமென் றிருந்தேன். உமக்கு உடம்பு எல்லாம் சுவஸ்தமானவுடன் செய்யலாமென் றிருந்தேன்.

க. அந்தக் கடிதத்திற்கு என்ன பதில் எழுதப் போகிருய்? எனக்குச் சொல்லக்கூடுமா?

ரா: தடையில்லே; இன்றைத்தினந்தான் பைபில் புஸ்தகம் ஒன்று வாங்கினேன். அதை முற்றிலும் நன்ருய்ப் படித்துப் பார்க்கப் போகிறேன். அதில் எழுதி யிருப்பதில் எனக்கு நம்பிக்கை யுண்டாஞல், ஆகட்டும் என்று ஒப்புக்கொள்ளுவேன்; இல்லாவிட்டால் முடியாது என்று எழுதிவிடுவேன். அவ்வளவுதான்.

க. ராமசந்திரா, உன்னிஷ்டப்படியே செய். நீ யொன்று தீர்மானித்துவிட்டால் அதை மாற்ற ஒருவராலும் ஆகாதென்று நன்ருய்த் தெரியு மெனக்கு. ஆயினும் உன்னே யொன்று வேண்டிக்கொள்ளுகிறேன்.—அந்தப் பைபில் புஸ்தகத்தைப் படிப்பதற்குமுன் நம்முடைய புஸ்தகமாகிய பகவத்கீதையை வியாக்கியானங்களுடன் ஒருமுறை வாசித்துவிட்டு பிறகு நீ யெதை வேண்டுமென்ருலும் படி. பிறகு நம்முடைய மதத்தில் நம்பிக்கை யுண்டாகாவிட்டால் கிரிஸ்துவ மதத்தை யாவது சேர், வேறு எந்த மதத்தை யாவது சேர். இதையாவது செய்வாயா என் பொருட்டு?

ரா. அண்ணு, அப்படியே ஆகட்டும். அதைப் படிக்கும்படியாக முன்னமே ஏன் என்னிடம் சொல்லவில்லே? அப்படியே செய்திருப்பேனே முன்பே.

க. அது என் தவறு! என் தவறுதான்!

ரா. சரி, இனியாவது உமது மனத்தில் ஒன்றும் கவலே வேண்டாம்.—அடே கிருஷ்ணு! வந்தாஞ மருந்துக்குப் போனவன்?

கி. [உள்ளிருந்து] இல்லே.

க. ராமசந்திரா, என் மனத்தில் இன்னென்றிருக்கிறது, இதையும் சொல்லிவிடுகிறேன்.

ரா. என்ன அது? சீக்கிரம் சொல்லிவிட்டு—கொஞ்சம் நிம்மதியாய் உறங்கும்—அதுதான் உமது உடம்பிற்கு நல்லது.

க. ஆம், அப்புறம் தூங்குகிறேன்.—கொஞ்சம் முன்பாக—பங்கஜவல்லியின்—அத்தை வந்திருந்தாள் இங்கே—

ரா. யாருடைய அத்தை?

க. பங்கஜவல்லியின்—உன் அகமுடையாளின்—

ரா. ஓ! அது வொன்ரு?—அண்ணு, அந்தப் பெண்ணை என் அகமுடையாளென்று என் எதிரில் சொல்ல வேண்டாமென்று எத்தனை முறை உமக்குக் கூறியிருக்கிறேன்? வீணுக எனக்குக் கோபம் உண்டாக்காதீர்!

க. நான் வேருென்றும் சொல்ல வரவில்லை.—அவள் அத்தை வந்து எப்படியாவது நிஷேக முகூர்த்தத்திற்கு நாள் குறிக்கும்படி கேட்டுப் போனுள். ராமசந்திரா என் எதிரில் வா.—நியாயமோ, அநியாயமோ. எப்படியும் நீ அக்னி சாட்சியாய் மணந்த மனைவி அவள். அவளைக் கைவிட்டு நீ கிரிஸ்துவனுகி வேருெருத்தியைக் கலியாணம் செய்துகொண்டால் அவள் கதி என்னவாவது? இவள் என்ன தப்பிதம் செய்தாள் இந்தக் கஷ்ட கதி யனுபவிப்பதற்கு?

ரா. நான் என்ன தப்பிதஞ் செய்தேன்? சாகுமளவும் எனக்கிஷ்டமில்லாத ஒரு பெண்ணைத் தலையில் கட்டிக்கொண்டழுவதற்கு? எல்லாம் நீர் செய்ததுதானே! அந்தச் சிறு வயதில் எனக்கு இந்தக் கலியாணம்—ஒரு இழவைச் செய்திராவிட்டால்?

க. வாஸ்தவம் நான் செய்தது தவறுதான்! உன் பாட்டியாரின் வார்த்தையைக் கேட்டு—

ரா. ஆம்! என் பாட்டி சொன்னுல் உமக்கெங்கே போயது யோசனை? நீர் படித்ததெல்லாம் எதற் காயது? அப்பொழுது உமக்கு ஒரு விளையாட்டா யிருந்தது! இப்பொழுது இதை யெல்லாம் யார் அனுபவிப்பது?

க. ஆம், ஒப்புக்கொண்டேன். நான் செய்த தப்பிதத்திற்கு இப்பொழுது நான்—இதோ—அனுபவிக்கிறேனே—போதாதா? என் தலை விதி! என் தலை விதி!

ரா. அண்ணு, நீர் என் முன் எதை வேண்டுமென்ருலும் சொல்லும்; இந்தத் தலை விதி யென்னும் வார்த்தை மாத்திரம் வேண்டாம். தலை விதியாவது? இது வேண்டாமென்று அப்பொழுது ஒரு வார்த்தை சொல்லி

யிருப்பீரானால், இந்தத் தலை விதி யெல்லாம் எங்கே பறந்துபோ யிருக்கும்?

க. அப்பொழுதும், இக் கஷ்ட மெல்லாம் அனுபவிக்க வேண்டு மென் றிருந்தால் அனுபவித்துத்தான் தீர வேண்டும்.

ரா. இன்னும் அந்தத் தலை விதியை விடமாட்டீரே! உங்களுக்கு இப்படிச் சொன்னால் தெரியாது.—அண்ணா, இவைகளை யெல்லாம் பற்றி நீரேன் கவலைப்படுகிறீர்? எல்லாந்தான் தலை விதியின்படி நடக்கப்போகிறது. நான் கிரிஸ்துவனாகி வேறொரு பெண்ணை கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்று தலை விதி யிருந்தால் அதை யாரால் தடுக்க முடியும்? உம்மால் தடுக்க முடியுமா? அல்லது என்னால்தான் தடுக்க முடியுமா? இதற்கென்ன சொல்லுகிறீ ரிப்பொழுது?

க. அப்படி உன் தலை விதி யிருந்தால் அதைத் தடுக்க மனுஷ்யனால் முடியாது.

ரா. பிறகு யாரால் முடியும்?

க. அந்தப் பரமேஸ்வரனால்தான் முடியும்.

ரா. ஆஹா!—அதற்கு அவர் ஒருவர் இருக்கிறாரா? அப்படி யிருந்தால் அவரைக் கேட்டுப் பாருமே, என்னைக் கேட்பதில் என்ன பலன்?

க. ஆம், இனி அவரைத்தான் பிரார்த்திக்கப்போகிறேன்.

ரா. பிரார்த்தியும். [கனகசபை ஐயர் கண்ணை மூடிக்கொள்கிறார்.] கிருஷ்ணன் மருந்து புட்டியுடன் வருகிறான்.

ஏனடா? இத்தனை நாழியையா இதை வாங்கி வர? கொண்டுவா இப்படி.

[புட்டியைத் திறந்து மருந்தை வார்த்துக் கொண்டுபோய்]

அண்ணா!—அண்ணா!—என்ன?

க. [கண் விழித்து] ஒன்றுமில்லை.

ரா. ஓ! பிரார்த்தனை செய்தீரோ உம்முடைய பரமேஸ்வரனுக்கு?

க. ஆம்.

ரா. என்ன பதில் சொன்னார்?—இந்த மருந்தை சாப்பிட்டு விட்டுச் சொல்லும்.

க. [மருந்தை வாங்கிப் புசித்துவிட்டு] ராமசந்திரா, என் பிரார்த்தனை நிறைவேறுமென்று எனக்குள் ஏதோ தோற்றுகிறது—அதுவும் சீக்கிரத்தில்

ரா. நிரம்ப சந்தோஷம்! அப்படிச் செய்வதற்கு உம்முடைய பரமேஸ்வரருக்குச் சக்தி யிருந்தால் அவரை நான் ஒப்புக்கொள்ள வேண்டியதே!

க. சத்தியமாய்?

ரா. ஏன்? சத்தியமாகவே!—இப்பொழுது நீர் கொஞ்சந் தூங்கும்.

க. ஜகதீஸ்வரா! எல்லாம் உம்முடைய கருணை!

ரா. ஆம், ஆம்!—உறங்கும் கொஞ்சம்.

க. ராமசந்திரா, எனக்கொரு முத்தங் கொடு.

ரா. என்ன அண்ணா, இது? [முத்தம் இடுகிருன்,] தூங்கும் இப்பொழுதாவது.

க. ஒன்றுமில்லை—நான் சந்தோஷமாய்—தூங்குகிறேன்.
[ராமசந்திரன் ஒரு போர்வையைப் போர்க்கிருன்]

*மறுபடியும் கிருஷ்ணன வருகிறன்.*

கி. தபால்காரன் கூப்பிடரான்.

ரா. யாரை?

கி. உங்களெதான்.

ரா. என்னடா அது? காகிதம் ஏதாவ திருந்தால் வாங்கிக்கொண்டு வருகிறதுதானே?

கி. தந்தியாம், அத்தெ நீங்க கையெழுத்து பண்ணிதான் வாங்கணுமாம்.

ரா. என்ன தந்தி யிப்பொழுது? யாரிடமிருந்து வந்திருக்கும்? [போகிருன், கனகசபை ஐயர் தலை ஒருபுறமாய்ச் சாய்கிறது. கிருஷ்ணன் விளக்கை யேற்றிவிட்டு வெளியே போகிருன்.]

*கையில ஒரு தந்தி காகிதத்துடன் ராமசந்திரன் மறுபடியும் விரைந்து வருகிறன்.*

என்ன ஆச்சரியம்!—அண்ணா, உம்முடைய வாக்கு பலித்தது! வாந்தி பேதியால் இறந்தாள் கமலா!—அண்ணா!— என்ன இது! ஏன் கையை இப்படி தொங்க விட்டுக்கொண்டிருக்கிறீர்? [தொட்டெடுக்கிருன்.]

என்ன !—அண்ணு ! அண்ணு ! [அசைத்துப் பார்க்கிருன்.]
ஓஹோ ! [ஹிருதயம் பரிசோதிக்கும் குழையை ஹிருதயத்தில் வைத்துப் பார்க்கிருன்.]
நினைத்தேன் ! நினைத்தேன் ! கொஞ்சம் முன்பு தெரியாமற் போச்சுதே !—அண்ணு ! அண்ணு !
[அவர் மார்பின்மீது சாய்ந்து விழுகிருன்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது இடைக் காக்ஷி.

*இடம்—புரசைவாக்கம் வெள்ளாள வீதியில் ஓர் வீட்டின் கூடம்.*

*காலம்—காலை.*

*சென்னகேசவ முதலியார், மாணிக்கம், கிருஷ்ணன், உடுப்பில்லாமல் கான்ஸ்டெபில் சுந்தரராஜம், இன்னும் நாலைந்து பேர் உட்கார்ந்திருக்கின்றனர். மங்கத்தாய் நின்றுகொண்டிருக்கிறள். ராமானுஜ முதலி கூடத்திலிருந்து வருவதும் போவதுமா யிருக்கிறன்.*

சே. பக்கத்து வீட்டிலிருந்தும் இவர் சமாசாரம் தெரியாமற் போச்சுதே இத்தனை நாளாக !—இவர் பெயர் என்னவென்று சொன்னுய் ?

கி. பேரா ?—நாங்கல்லாம் பிஸ்தாக்கொட்டெ சாமியார் இண்ணு கூப்பிட்ரோம்.

சே. அது ஏனப்படி ?

கி. பிஸ்தாக்கொட்டெ தவிர வேறெண்ணும் சாப்ட்ரதில்லெ இவரு. அத்தொட்டு, பிஸ்தாக்கொட்டெ சாமியாரு இண்ணு பேர் வைச்சோம்.

சே. அதை முன்பே சொல்லாமற்போனுயே. நான் கொஞ்சம் பாதுமை கொட்டைதான் கொண்டுவந்து இருக்கிறேன்.—

கி. அத்தெ சாப்பிடமாட்டாரே அவரு ; ஆனுலும் அவர் சிஷ்ய பிள்ளெயெ கேட்டுப் பார்க்கலாம்.

மா. கேக்கவாணும் தாதா, நம்போ பாதுமெ கொட்டெயெ ஒடச்சி சாப்புட்டுடலாம் தாதா.

சே. அடே! பேசாம விருடா பயா.

கி. இதோ கேட்டுப் பார்க்கலாம்.—ஐயா, சாமியாரு பாதுமெ கொட்டெ சாப்பிடுவாருங்களா?

ரா. பாதுமெ கொட்டெயா? அது அவ்வளவா ஏத்துக்காது அவருக்கு. ஆனா,கசப்பில்லாததா குடுத்தா, கொஞ்சம் கல்கண்டோடே சேத்து, மத்யானத்துக்கு சாப்பிட்டா சாப்பிடுவாரு, அதுவும் அவருக்கு இஷ்டம் இர்ந்தாதான்.

சே. சாப்பாடே சாப்பிடுகிற தில்லையா?

ரா. ஒருப் பருக்கே எதிர்லே வரக்கூடாது. காலமெ ஒரு வேளெ இந்த பிஸ்தாக் கொட்டெயெ நெய்யிலே வறுத்து வெள்ளெ சக்கரெ போட்டு, ஒரு பத்து பலம் சாப்பிடுறாரே—அதான்.

சே. இராத்திரிக்கு?

ரா. ஒரு பொழுதுதான். இந்த பிஸ்தாக் கொட்டெகூட கெடெயாது. ஒரு சீப்பு வாழெப் பழமும் ஒரு படி பாலும் சுண்டக் காச்சி சாப்பிட்ராரே அத்தோடே சரி.

சே. இப்பொழுது என்ன செய்கிறார் சுவாமியார்?

மா. தூங்கிக்கினு இருக்கிறாரு தாதா. நானு மொள்ள கதவு சந்தாலே பாத்தேன்.

சே. அடே பயலே! பேசாம விரு! பெரியவர்களை அப்படி யெல்லாம் சொல்லக்கூடாது.

மா. கொஞ்சம் முன்னேகூடம் கொறட்டெ சத்தம் கேட்டுதே தாதா!

சே. ஏ—எப்பொழுது வெளியே வருவார்?

கி. வர்ர நேரமாச்சி.

மா. முன்னே மணி சத்தம் கேக்கும், அப்புறம் வெளியி லே வருவாரு—அதோ பாத்திங்களா!

[மணி யோசை கேட்கிறது]

*வெங்கடாசலம் பிள்ளை அழைத்துவர கோபாலகிருஷ்ண நாயுடு சன்யாசி வேஷத்துடன் மெல்ல வருகிறன்.*

**எல்லோரும்.** *சாமி! சாமி!* [அவனுக்கு நமஸ்காரம் செய்கிருர்கள்.]
[அதைக் கவனியாததுபோல் ராமானுஜ முதலி ஒருபுறம் போட்ட மணைமீது உட்காருகிருன்.]

**கோ.** [கண்ணை மெல்ல திறந்து] *திருநீலகண்டம்!— சிஷ்யா, இந்த நாய்—இன்றையதினம்—இப்பொழுது—எங்கே இருக்கிறது?*

**மா.** *எந்த நாயி தாதா*

**செ.** *அடே பையா? பேசாம விரு! அதனப் பிரசங்கி!*

**ரா.** *புரசைவாக்கத்தில்! சென்னப்பட்டணத்தில்!*

**கோ.** *திருநீலகண்டம்!— இந்த நாய்க்கு இன்றைக்கு ஏதா வது பொசிப்பு உண்டோ?*

**ரா.** *உண்டு. உண்டு. இண்ணைக்கு ரொம்ப பேரு சிஷ்ய ருங்கோ வந்திருக்காங்க உங்களெ பாக்க.*

**கோ.** *திருநீலகண்டம்!— ரொம்ப— சந்தோஷம். ஆனல் சிஷ்ய கோஷ்டிகளைக் காக்கும்படி செய்யலாகாது. உடனே வரச்சொல் அவர்களை, இந்த நாயின் சமீபத் தில்.*

**வெ.** *ஐயா! வாங்க ஒருத்தர் ஒருத்தரா. வந்து பாத காணிக் கெ உண்டியிலே சமர்ப்பிச்சி, கிட்ட வந்து நமஸ்கா ரம் பண்ணி, விபூதிப் பிரசாதம் வாங்கிக்கினு போங்க.*
[வந்திருப்பவர்களெல்லாம் அப்படியே செய்கின்றனர்.]

**செ.** *ஏ! நம்முடைய பிரார்த்தனையை எப்பொழுது சொல் வது?*

**வெ.** *அதெல்லாம் வாயெத் தெறந்து கேக்கக்கூடாது. விபூ திப் பிரசாதம் வாங்கும்போது மனசுலே நெனச்சிக் கோணும்.*

**செ.** *அப்படியே!* [நமஸ்காரஞ்செய்து விபூதி பெற்றுக் கொள்ளுகிருர்.]

**சு.** [கடைசியாக வந்து நமஸ்கரித்து] *சுவாமி! நா லேஞ்சி நாளா வந்துக்கினு இருக்கரே. என் கோரிக்கை கை கூடலே*

இண்ணைக்காவது அனுக்கிரகம் பண்ணணும். விசேஷ பாத காணிக்கெகூட கொண்டுவந் திருக்கிறேன்!

[இரண்டு ரூபாயை அவர் காலருகில் வைக்கிருன்.]

**கோ.** சீசீசீசீ!—திருநீலகண்டம்! திருநீலகண்டம்!— சிஷ்யா! எடுத்துவிடு! எடுத்துவிடு இந்த வெள்ளிப் பிசாசை! தூதூதூ!

**வெ.** அப்பவே சொன்னேனே ஐயா! பாத காணிக்கெயெல்லாம் அந்த உண்டியிலே போடணுமிண்ணு! இப்படி கொடுங்கையா அத்தெ!

**கோ.** சிஷ்யா! வேண்டாம்! வேண்டாம்! நீயும் தீண்டாதே அந்த வெள்ளிப் பிசாசை உன் விரலால்! அவராக அந்த உண்டியில் போட்டு அடைத்து விடட்டும் அந்தப் பிசாசை. [சுந்தரராஜம் அந்த ரூபாயை உண்டியில் போடுகிருன்.]

**ரா.** ஐயா, நீங்கல்லா உத்தரவு பெத்துக்கிங்க; சாமியாருக்கு பூஜெ வேளெ யாச்சி.

**எல்லோரும்.** ஆஹா, அப்படியே.

[விடைபெற்றுச் செல்கின்றனர். சுவாமியாரும் சிஷ்யர்களும் உள்ளே போகிருர்கள்.]

**சு.** ஏதய்யா! தாங்கள் கூட இண்ணைக்கு வந்தாப்போலேயிருக்குதே! ரிஸ்தாக் கொட்டெ சாமியாரே பாக்க— என்ன, விசேஷ மேதாவது உண்டோ வீட்டிலே?

**செ.** இல்லை—என் தம்பிக்கு உடம்பு மிகவும் அசௌக்கியமா யிருக்கிறது.—அதற்காக வந்தேன்.

**சு.** இது யார்? உங்கள் பேரப்பிள்ளையா?

**செ.** ஆம்.

**சு.** ஏண்டாப்பா தம்பி, படிக்கிறையா நீ?

**மா.** ஆமாம்.

**சு.** நீ விபூதி வாங்கிக்கும்போது என்ன நெனச்சிக்கினே?

**மா.** நானு—நானுகூட ஒரு சாமியாரா பூடணும் இண்ணு நெனச்சிக்கினே.

**சு.** ஏது! பிள்ளையாண்டான் தேவலேயே?—ஏண்டாப்பா அப்படி?

மா. சாமியாரா போனுக்கா, தினம் பிஸ்தாக் கொட்டெ பாதுமெ கொட்டெ அல்லாம் ஆப்புடும்.

சே. அடே! அதனப் பிரசங்கி! மூடு வாயை! இந்த மாதிரி எல்லாம் பேசினல் உன்னை இனிமேல் அழைத்துக் கொண்டு வரமாட்டேன்.

சு. இல்லிங்கோ! அவன் சொல்ரதும் கொஞ்சம் புத்தி சாலித் தனமாத்தான் இருக்குது. நீங்க யோச்சி பாருங் க.—ஏண்டாப்பா கிருஷ்ணு, என்னு உன்னெ கூப் பிட்டு ஏதோ ரகசியம் பேசினரே அந்த சிஷ்யப் பிள் ளெ, என்ன சமாசாரம்.

கி. அதெல்லாம் சொல்லக்கூடாது. ரகசியம் ஒருத்தர் கிட் டவும் சொல்லக்கூடாதிண்ணுரு. சொன்னு கெட்டுப் பூடும்.

சு. வாடா எங்கிட்ட சொன்னு என்னு?

[இருவரும் பேசிக்கொண்டு போகிறார்கள். எல்லோரும் போனபிறகு ராமா நுஜம் கதவை மூடிவிடுகிறான்.]

ரா. ஒழிஞ்சுது மூண்டங்கல்லா.— வாங்க! வாங்க!

*கோபாலகிருஷ்ண நாயுடும், வெங்கடாசல பிள்ளையும் வருகிறார்கள்.*

கோ. நீ யாரையோ பாத்து சந்தேகப்பட்டே! அவ னல்லா, அவன் மூன்சி நண்ணு தெரியுமே எனக்கு.

வெ. எனக் கென்னமோ சந்தேகமா யிருக்குது. இப்பவே சொன்னேன்.

கோ. ராமானுஜம், உண்டியிலே எவ்வளவு சேர்ந்தது பாத் தையா?

ரா. ஆறரெ ரூபா.

கோ. அதுலே அரெ ரூபா எடுத்துக்கினு போயி நல்ல ஆட்டு மூளையா பாத்து வாங்கிக்கினு வா. ஜாக்கிரதையா மூடி வா, பத்ரம்.

ரா. தெரியும், தெரியும். நீங்க கதவெ சாத்திவையுங்க.

[போகிறான்.]

இரண்டாவது இடைக்காட்சி முடிகிறது.

# இரண்டாம் அங்கம்

---

## முதல் காட்சி

*இடம்—பங்களாவின் தாழ்வாரம். காலம்—பகல்.*

*சில நோயாளிகள் காத்திருக்கிறார்கள்.*

*சாமிநாதன் ஒரு புறம் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான்.*

*கிருஷ்ணன் வருகிறான்.*

கி. ஐயா. உங்களுக்கு எத்தனிதரம் சொன்னாலும் தெரிய லெ! ஐயர் அவுங்க ஆம்படையாளுக்கு ஸ்ராத்தம் இண்ணைக்கி. நீங்க எத்தனி நாழி காத்திருந்தாலும் பாக்கமுடியாது அவரெ, கொஞ்சம் தயவுசெய்து நீங்கள்ளாம் நாளெக்குப் பிம்மாலெவந்துடுங்க, இண்ணு சொல்லச் சொன்னாரு. [சாமிநாதன் தவிர மற்றவர்க ளெல்லாம் போகிறார்கள்.]

காலமே புடிச்சி வந்தவங்களெ போங்க போங்க இண்ணு சொல்ரத்துக்கே சரியா யிருக்குது எனக்கு வேலே!— ஏன் ஐயா, நீங்க மாத்திரம் உக்காந்துக் கினு இருக்கறிங்கோ?— அவுங்களுக் கெல்லாஞ் சொன்னது உங்களுக்குக் கேக்கலெயோ?

சா. உன் பெயர் என்ன? கிருஷ்ணனா?—இப்படி வா.
[ஒரு ரூபாயை எடுத்து அவன் கையில் கொடுத்து]

ஸ்ராத்தம் எல்லாம் முடிந்து போச்சுதா? என்ன செய்கிறார் இப்பொழுது?

கி. ஸ்ராத்தம் முடிந்து போச்சு, சாப்பிட்டிண்டிருக்கிறாரு.

சா. நீ போயி மெல்ல, மற்றவர்களெல்லாம் போய்விட்டார்கள், ஒருத்தர் மாத்திரம் அவசியமாய்ப் பார்க்க வேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்லிவிட்டு வா. [பணப் பையை எடுக்கிறான்.]

ரா. [உள்ளிருந்து] அடே, கிருஷ்ணா!

கி. வந்தூட்டேன்!

ரா. [உள்ளிருந்து] என் வண்டியெ சீக்கிரம் போடச்சொல்.

கி. இதோ சொல்றேன்.—அதோ சாப்பிட்டாச்சு, உடுத் திக்கப் போறாரு. நீங்க இங்கேதானே கொஞ்சம் இருங்க. [போகிறான்.]

சா. எப்படியாவது அழைத்துக்கொண்டு போகவேண்டு மின்றைக்கு. இவன் மனம் மாறி யிருக்கிறது என்ப தற்குச் சந்தேகமே யில்லை; இல்லாவிட்டால் இறந்து விட்டதாக எண்ணி யிருக்கும் பெண்சாதிக்காக ஸ்ராத் தத்தை அவ்வளவு சிரத்தையோடு செய்வானா? உண் மையில் பங்கஜவல்லி இறந்து விட்டதாகத்தான் எண் ணி யிருக்கிறான். — உண்மையை வெளியிடவா? — பார்ப்போம்.—அதைக் கடைசி மார்க்கமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

மறுபடியும் கிருஷ்ணன் வருகிறான்.

கி. நான் சொல்லிப் பார்த்தேன். அவரு ஒரே பிடிவாதமா "இண்ணெக்கி அவசரமாப் போறேன், நாளெக்கிக் காலமே வரச் சொல்லு இண்ணு" சொல்லிட்டாரு!— நான் சொல்றபடி கேளுங்க—வண்டியிலே யேர்ரத் துக்கு இப்படிதான் வருவாரு, அப்படியே புடிச்சிக் கிங்கோ! என்னெமாத்திரம் இழுத்துடாதிங்கோ.

சா. [இன்னொரு ரூபாய் கிருஷ்ணனுக்குக் கொடுத்து] சரிதான், போ. [கிருஷ்ணன் போகிறான்.]

மற்றொரு புறமாக ராமசந்திரன் வருகிறான்.

ரா. அடே கிருஷ்ணா, இந்தப் பையைக் கொண்டுபோய் வண்டியில் வை. [கிருஷ்ணன் வந்து பையைக் கொண்டு போகிறான்.] யார் அது?

சா. நான் காலை முதல் காத்துக்கொண் டிருக்கிறேன்.— அவசரமான விஷயம்.

ரா. தாங்கள் என்னைத் தயவுசெய்து மன்னிக்கவேண்டும். ஒரு நோயாளி மிகவும் அசௌக்கியமா யிருப்பதால் அவரை மாத்திரம் பார்க்கப் போகிறேன். தாங்கள்—

சா. என் வீட்டிலிருக்கும் நோயாளி அதைவிட அசௌக் கியமாயிருக்கிறாள். உங்களுக்கு என்ன வேண்டுமென் றாலும் தருகிறேன். எப்படியாவது தயவுசெய்து வர வேண்டும்.

ரா. ஐயா, இன்றைத்தினம் என் வீட்டில் ஸ்ராத்தம், இன்றைத்தினம் நான் ஒருவரையும் பார்ப்பதில்லை. நான் இப்பொழுது பார்க்கப்போகும் நோயாளியிட மிருந்து ஒரு காசும் பெறுபவனல்ல. தர்மத்திற்கே போகிறேன்.....ஆகவே—

சா. ஆனால் என் வீட்டிற்குத் தாம் வரவேண்டியது, அதைவிட பதின்மடங்கு அதிகமான தர்மமாகும்.—

*மறுபடியும் கிருஷ்ணன் வருகிறன்.*

கி. வண்டி வந்தூட்டுது.

ரா. என்னை மன்னிக்கவேண்டும். நாளை காலை ஆறு மணிக்கெல்லாம்—

சா. ராமசந்திரன்! நான் யார்—தெரியவில்லையா—உனக்கு?

ரா. யார்? தெரியவில்லை,—மன்னிக்கவேண்டும்.

சா. தொண்ணூற்றெட்டாம் வருஷம் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்யும்பொழுது மூழ்கிப்போகவிருந்த உன்னைக் காப்பாற்றினேனே, ஞாபகம் இருக்கிறதா?

ரா. சாமிநாதன்! [அப்படியே அவனைக் கட்டிக்கொள்கிறன்.]

சா. இத்தனை நாழிகை பிடித்ததா உனக்கு என்னைக் கண்டுபிடிக்க?

ரா. சாமிநாதன்! எப்பொழுது வந்தாய் ஜப்பானிலிருந்து? எவ்வளவு மாறியிருக்கிறாய்? முன்பே ஏன் சொல்லவில்லை என்னிடம்? எத்தனை நாழிகை காத்திருந்தாய் இங்கே? இதுவும் ஒரு விளையாட்டா? உன் பழைய குணம் இன்னும் போகவில்லையா? பசியுடனாயிருக்கிறாய்? சாமிநாதன், இன்றைக்கு உன் தங்கையின் ஸ்ராத்தம்.—அவள் இறந்து போனது தெரியுமல்லவா உனக்கு?

சா. தெரியும். அப்பொழுதே எனக்கும் தந்தி வந்தது. அப்பொழுது அங்கிருந்து வருவதற்கு முடியாமற் போச்சுது. அவளைத்தான் கவனியாது விட்டாய்—இறந்துபோனாள். இப்பொழுது அவள் தங்கை கமலாவுக்கு மிகவும் உடம்பு அசௌக்கியமா யிருக்கிறது

ஓர் வித க்ஷய ரோகம்,— எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள். இனி குணமாவதானல் உன்னுல்தான் குணமாக வேண்டுமென்று எல்லோரும் சொல்லுகிருர்கள். நீ உடனே புறப்பட்டு என்னுடன் வரவேண்டும்.

ரா. சாமிநாதன், நான் சொல்வதைக் கேள்—

சா. நான் ஒரு வார்த்தையுங் கேளேன். நீ யிந்த க்ஷணமே என்னுடன் புறப்படவேண்டும்.

ரா. சாமிநாதன், அவசரப்படாதே, நான் சொல்வதைக் கேள். நான் ஒரு நோயாளியை இன்றைத்தினம் பன்னிரண்டு மணிக்கெல்லாம் பார்ப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன்; உனக்குக்கூட தெரிந்திருக்கலாம், நம்முடைய பழைய தமிழ் உபாத்தியாயர் தம்பி. நேராகப் போய் அவரைப் பார்த்துவிட்டு, உடனே க்ஷண நேரமும் போக்காமல் உன் வீடு வந்து சேர்கிறேன். புரசைவாக்கத்தில் உன் பழைய வீட்டில் தானே இருக்கிருய் ?

சா. ஆம், சரிதான்; அப்படியே செய், உடனே புறப்படு நீ.

ரா. இதோ—நீ சாப்பிட்டுவிட்டுப்போ—அடே கிருஷ்ணு,—

சா. வேண்டாம், நான் சொல்வதைக் கேள். நான் வீட்டிற்குப் போய் சாப்பிட்டுவிட்டு சித்தமாயிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் வந்து சேர்.

ரா. அப்படியே.—நீ யெப்பொழுது வந்தாய் ?—இத்தனை காலமாக ஒரு கடிதமாவது எழுதினையா ?— அதில் மாத்திரம் மாறவில்லைபோ லிருக்கிறது ?

சா. நேரமாகிறது—உன் கேள்விகளுக்கெல்லாம் பதில் நீ வீட்டிற்கு வந்தபிறகு சொல்லுகிறேன் சாவகாசமாய். புறப்படு உடனே.

ரா. இதோ இன்றைத்தினம் இராத்திரி, இங்கே வருகிருயா சாப்பாட்டிற்கு ?

சா. எல்லாம் பார்க்கலாம்—சீக்கிரம் வந்து சேர் நீ. உனக்காக நான் காத்திருப்பேன் அங்கே.

ரா. இதோ வந்துவிட்டேன். [போகிருன்.]

சா. என்ன மாறினாலும் ராமசந்திரன் பழைய ராமசந்திரன் தான்!—கிருஷ்ணா?

*மறுபடியும் கிருஷ்ணன் வருகிறான்.*

என் வண்டியைக் கூப்பிடு.

கி. இதோ.

சா. ஏ கிருஷ்ணா, அதோ உள்ளே புஷ்ப மாலை போட்டிருக்கிறதே யாருடைய படம் அது?

கி. ஐயர் அவுங்க ஆம்படையாள் படம். இண்ணெக்கி ஸ்ராத்தமாச்சே—

சா. சரி, என் வண்டியைக் கூப்பிடு சீக்கிரம்.

கி. கொஞ்சம் தாகத்துக்கு ஏதாவது சாப்பிட்டுப் போறைகளா?

சா. வேண்டாம்—வண்டியைக் கூப்பிடு சீக்கிரம்.

கி. இதோ. [போகிறான்.]

சா. சரி, பாதி வேலை முடிந்தது. [போகிறான்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

*இடம்—புரசைவாக்கத்தில் பங்களாவில் ஓர் அறை. காலம்—பகல்.*

*பங்கஜவல்லி ஒரு கட்டிலின்மீது படுத்திருக்கிறாள்.*
*மங்கைத்தாய் மெல்ல விசிறிக்கொண்டிருக்கிறாள்.*

ம. அம்மா, நானு ஒண்ணு சொல்றேன், எம்மேலே கோவிச்சிக்காதிங்கோ; இந்த மருந்துலே எல்லாம் ஒண்ணும் பொறயோஜனமில்லெ. வெள்ளாழத் தெருவிலே எங்க ஊட்டுப் பக்கத்துலே ஒரு சாமியாரு வந்திருக்கிறாரு. அவரு விபூதி மந்திரிச்சி கொடுக்கறாரு. அந்த விபூதியிலெதான் உங்க நோவு தீரும். எந்த நோவாயிருந்தாலும் அவர் கையிலேயிருந்து மூணு தரம் வாங்கிக்கினா பூடும் தம்மா! எங் கண்ணாலே தினம் பாக்கறனே, கொஞ்சம் நீங்க பெரிய மனசு பண்ணி,

அண்ணுகிட்ட உத்ரவு வாங்கிக்கினு, நேரா வந்து கண்ணுலேதாம் பாருங்களெ அவரெ.

ப. அடி மங்கா, என்னை யேன் அடி தொந்தரவு செய்கிறாய்? இதி லெல்லாம் எனக்கு நம்பிக்கை யில்லை யென்று எத்தனை தரம் உனக்கு நான் சொல்வது?

ம. அப்புறம் எப்படி அம்மா சவுக்கிய மாவுறது? இதுவும் வாணும் இண்றிங்க, மருந்தும் சாப்டமாட்டேன் இண்றிங்க! ஒடம்பு வர வர எளெச்சிப் போவுதே! துரும்பு துரும்பாப் போறிங்களே.—

ப. எல்லாவற்றிற்கும் ஜெகதீசனிருக்கிறார்! அவர் விட்ட வழியாகிறது.—மங்கா, அந்த ராமாயணத்தை எடு இப்படி.

ம. அது ஏம்மா இப்போ? இந்த புஸ்தகங்களெ யெல்லாம் படிச்சி படிச்சிதான் ஒங்களுக்கு இந்த நோவு வந்துது! —இப்ப வேணும்மா அது.

ப. நீ எடடி அதை; நான் படிக்கவில்லை இப்பொழுது, ஒன்று பார்க்கவேண்டும். [மங்கைத்தாய் கொடுக்கிறாள்.]

சாமிநாதன் கையைத் துடைத்துக்கொண்டு மெல்ல பின் புறமாக வந்து நிற்கிறான்.

[கண்களை மூடி புஸ்தகத்தைத் திறந்து, அந்தப் பக்கத்தைப் பார்க்கிறாள்.]

சா. சரி!—சரியான இடந்தான் வந்தது! அவன்—ராமசந்திரன், பெயரும் சரியாகத்தானிருக்கிறது.—நீ சீதை.—தூதுபோய் வந்த அநுமார் நானே?—

ப. போ, அண்ணு. உன்னை யார் வந்து பின்னால் பார்க்கச் சொன்னது?—உனக்கு எல்லாம் ஏளனந்தான்.

சா. மங்கா, நீ வீதி வாசற்படியண்டை யிருந்து பார்த்துக் கொண்டிரு; வயித்தியர் வண்டி வரும், வந்தவுடன் என்னிடம் வந்து சொல், போ. [மங்கைத்தாய் போகிறாள்.] [நாற்காலியில் உட்கார்ந்து] நான் ஏளனஞ் செய்யவில்லை. உன் சாஸ்திரங்கூட உனக் கனுகூலமாயிருக்கிறது. இனிமேல் ஒன்றும் ஆக்ஷேப மில்லையே?

ப. அண்ணு, என் தலைவிதியின்படி யாகிறது. எனக்காக நீ யேன் இவ்வளவு சிரமப்படுகிறாய்?

சா. என்ன மறுபடியும் பழைய கதை ஆரம்பித்தாய்? ஒரு வேளை உன் புருஷனாலேயே உன் வியாதி குண மாக வேண்டுமென்று உன் தலை விதி யிருந்தாலோ?

ப. அதன்படி ஆகித்தான் தீரும்.

சா. அதற்கு ஆக்ஷேபனை செய்வானேன்?

ப. இல்லை, அண்ணா—எனக் கேதோ பயமா யிருக்கிறது.

சா. பயம் என்ன இதில்?

ப. ஒரு வேளை அவர் என்னை இன்னாளென்று கண்டு பிடித்து விட்டால்?

சா. அதைப்பற்றி மாத்திரம் உனக்குச் சந்தேகமே வேண்டாம். நீ குழந்தையா யிருந்தபொழுது கலியாண காலத்தில் பார்த்தது; அப்புறம் உன்னைப் பார்த்தவனே அன்று. அதற் கப்புறம் நான் அவனுடன் ஒன்றாய் எத்தனை வருஷம் படித்தேன்? என்னையே அவன் கண்டுபிடிக்க முடியவில்லையே நானாகக் கூறுமளவும்! உன்னைக் கண்டுபிடிக்கப் போகிறனா? அதுவும் நீ இறந்துவிட்டா யென்றெண்ணி உனக்கு ஸ்ராத்தம் செய்கிறன்—நான்தான் நடந்தவற்றை யெல்லாம் உனக்குச் சொன்னேனே, உனக்கு அந்த சந்தேகமே வேண்டாம்.

ப. அண்ணா, அப்படி யிருக்கும்போது எனக்கு உடம்பு சுவஸ்தமாகித்தான் என்ன பிரயோஜனம்? நான் இப்படியே செத்துப்போவதே நல்லதல்லவா? அவருக்கும் சௌக்யமாயிருக்கும்.

சா. இதென்ன இப்படி வார்த்தை சொல்கிறாய் மறுபடியும்? நேற்றைத்தின மெல்லாம் கிளிப் பிள்ளைக்குச் சொல்வதுபோல் எல்லா நியாயங்களையும் எடுத்துக் கூறினேனே. அந்தக் கிரிஸ்துவப் பெண் என்னவோ இறந்துபோய் விட்டாள் என்பதற்குச் சந்தேகமே யில்லை. அவன் ஏதாவது கிரிஸ்துவ னாக வேண்டுமென்று எண்ணங்கொண்டிருந்தால் இத்தனை நாளாக ஆகியிருக்கமாட்டானா? நான் சொல்வதை உறுதியாய் நம்பு. அதெல்லாம் பொய் இப்பொழுது வைதீகம் முற்றிப்போ யிருக்கிறது! நான் எல்லாம் விசாரித்தேன்.

சிவ பூஜை யில்லாமல் ஒரு வேளையும் போஜனமும் கொள்வதில்லையாம். இதெல்லாம் போகட்டும், காலையில்தான் உனக்கு ஸ்ராத்தம் செய்ததை நான் நேராகப் பார்த்தேனே. முன்புபோ லிருந்தால் அதைச் செய்வானா?

ப. எல்லாம் நேரில் பார்த்தால் தெரிந்து போகிறது.

சா. ஆ! அது சொன்னையே, அது சரியான வார்த்தை. அப்படியே செய்; நான் சொன்னதெல்லாம் உண்மையோ அல்லவோ என்று நீயே பார்த்துச் சொல்.

ப. ஆம், பிறகு உண்மையை யறிந்தபின், ஏன் இப்படி என்னை மோசம் செய்தாய் என்று என்மீது கோபித்துக்கொண்டு திரும்பிப் பாராமற்போனால்?

சா. நான் சொல்வதைக் கேள். முன்பு உனக்கு உடம்பு சுவஸ்தமாகட்டும். அதுவரையில் நாம் ஒன்றும் வெளியிடவேண்டியதில்லை. அதற்குள் அவனுடைய உண்மையான மன ஸ்திதியை நாம் கண்டறியலாம். அதற்கப்புறம் எப்படி சமயம் வாய்க்கிறதோ பார்த்துக் கொள்வோம்.

ப. அதுவரைக்கும், நான் யாரென்று கேட்டால் என்ன சொல்வாய் அவருக்கு?

சா. அதற்கெல்லாம் தக்கபடி யுக்தி செய்திருக்கிறேன்!—

*மங்கைத்தாய் வருகிறாள்.*

ம. யாரோ ஒருத்தர் வண்டியிலே வந்திருக்காரு, உங்களெக் கூப்பிடுறாரு.

சா. அவன்தான்; நான் அழைத்துவருகிறேன். நீ ஒன்றும் பயப்படாதே. [போகிறான்.]

ப. மங்கா, இப்படிவா. அந்தக் கண்ணாடியை எடு, பொட்டு கலைந்துபோ யிருக்கிறது. அந்த குங்கும டப்பியை யெடு. [குழலைத் திருத்தி பொட்டணிகிறாள்.]

*சாமிநாதன் ராமசந்திரனை அழைத்துக்கொண்டு வருகிறான்.*

சா. கமலா—இதோ வைத்தியர் வந்திருக்கிறார். உன்னுடைய தேக ஸ்திதியை யெல்லாம் அவருக்குச் சொல். ஒன்றும் சங்கோசப்படவேண்டாம்; எல்லாம் நம்மு

டைய நெருங்கிய பந்துதான். இறந்துபோன பங்கஜ வல்லியின் புருஷன் இவர். உனக்கு ஞாபகம் இராது. அப்பொழுது நீ கைக் குழந்தை. இந்த வியாதியை சுவஸ்தப்படுத்துவதில் இவரைப் பார்க்கிலும் கெட்டிக் காரரில்லையென்று இந்த இந்தியா முழுவதும் பிரசித்தி பெற்றிருக்கிறார். உன்னை யெப்படியும் சுவஸ்தப்படுத் துவார். ஒன்றும் பயப்படாது சொல்.

ப. நிற்கிறீர்களே.

சா. ஓ! அதை நான் கவனிக்கவில்லை.

[ஓர் நாற்காலி கொடுக்க ராமசந் திரன் உட்காருகிறான்.]

ரா. அம்மா, உங்களுக்கு உடம்பு என்னமா யிருக்கிறது? சொல்லுங்கள்.

சா. பெண்சாதியின் தங்கையை அழைப்பதற்கு 'அம்மா' என்ன? பெயரிட்டழைக்கிறதுதானே? அதில் என்ன தவறு?

ப. அண்ணா, நீதான் சொல்.

சா. சங்கோசப்படுகிறாள்போ லிருக்கிறது. இராதா, நீ அம்மா என்று அழைத்தால்? கொஞ்சம் நாளாக ஆகாரமே யேற்றுக்கொள்ளுகிற தில்லை. அடிக்கடி ஜ்வரம்போல் தேகம் உஷ்ணத்தைக் காட்டுகிறது. வர வர உடம்பு மெலிந்துகொண்டே வருகிறது. ராத்திரி யில் தூக்க மென்ப தில்லை. இப்பொழுது கொஞ்சம் நாளாக ஒருவிதமான இருமலும் கண்டிருக்கிறது. இதுவரையில் பார்த்த வைத்தியர்க ளெல்லாம் இது க்ஷயத்தைச் சேர்ந்தது; நீ வந்தால்தான் தீரும், என்று சொல்லிவிட்டார்கள். அதற்காகத்தான் உன்னை அவ் வளவு அவசரமாக அழைத்து வந்தது.

ரா. எத்தனை நாளாக இப்படி இருக்கிறது?

சா. ஒரு வருஷமாய்.

ப. இல்லை, இரண்டு வருஷமாய்.

ரா. கொஞ்சம் கையைக் காட்டுங்கள் தயவுசெய்து.

[நாடியைப் பார்க்கிறான்.]

நாக்கை நீட்டுங்கள்—கொஞ்சந் திரும்புங்கள்.

[ஹிருதயம் பரீக்ஷிக்கும் குழையை முதுகில் வைத்துப் பரிசோதிக்கிறான்,]

இன்னொரு முறை கையைக் காட்டுங்கள்.—என்ன இது?

சா. என்ன சமாசாரம்?

ரா. ஹிருதயம் ஒருவாறு யிருக்கிறது. மிகவும் பலஹீனப் பட்டிருக்கிறது. குழந்தை யேதாவது பிறந்து இறந்து போய்விட்டதா?

ப. இல்லை.

சா. குழந்தையு மில்லை, ஒன்றுமில்லை இன்னும் நிஷேக முகூர்த்தமே ஆகவில்லை?

ரா. மனத்தைக் கலக்கவல்ல பெரிய ஆபத்து ஏதேனும் நேரிட்டதா எப்பொழுதாவது? தீ கண்டம் ஜல கண்டம் ஏதாவது நேர்ந்ததுண்டா?

சா. ராமசந்திரா, இப்படி வா, ஒரு வார்த்தை.—ஒன்று மில்லை அம்மா, [ஒரு புறமாக சாமிநாதனை அழைத்துப்போய்] வயித்தியரிடம் ஒன்றும் ஒளிக்கக்கூடாது. இவளுக்கு நிஷேக முகூர்த்தமெல்லாம் நிச்சயித்த பிறகு, இவள் புருஷன் திடீரென்று ஒருவரிடமும் சொல்லாமல் ஜப்பான் தேசத்திற்குப்போய் படிக்கவேண்டுமென்று என்னிடம் வந்துவிட்டான். அதனால் மிகவும் வருத்தப் பட்டு தன் உயிரையே மாய்த்துக்கொள்ள நிச்சயித்த தாக எனக்கு எழுதினார்கள். நான் ஜப்பானில் அவனைப் பார்த்து எவ்வளவோ புத்தி கூறி, 'திரும்பிப் போடா' என்று சொல்லிப் பார்த்தேன். அவன் ஒரே பிடிவாதமாய், 'என் பரீக்ஷை யெல்லாந் தீரு மளவும் இந்தியாவுக்கு நான் திரும்பவேமாட்டே' னென்று பிடி வாதமா யிருக்கிறான் அங்கேயே. அது ஏதாவது இந்த வியாதிக்குக் காரணமா யிருக்குமோ? அவள் எதிரில் இதை உனக்குக் கூற எனக் கிஷ்ட மில்லை. அதற் காகத்தான் ஒருபுறமா யழைத்தேன்.

ரா. சந்தேகமில்லை. அவளது ஹிருதயம் கலங்கி மிகுந்த பலஹீன ஸ்திதியிலிருக்கிறது. உடனே அவளது புரு ஷனுக்கு தந்தி கொடுத்து வரவழை. நாம் மிகவும்

ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். என்னலானது நான் பார்க்கிறேன். நான் கூறியதை ஒன்றும் அவளிடம் கூறவேண்டாம்.

ப. அண்ணு, வயித்தியர் என்ன சொல்லுகிருர்?

சா. ஒன்றும் இல்லே, அம்மா. எல்லாம் சீக்கிரம் சுவஸ்தமாய் விடும்; தான் கொடுக்கும் மருந்தைமாத்திரம் ஜாக்கிரதையாய்ச் சாப்பிட்டுவரவேண்டு மென்கிருர்.

ரா. உம்,—பெய ரென்ன?

சா. கமலாம்பாள். — என்னேயே உன்னுல் கண்டுபிடிக்க முடியாமற் போயிற்றே, உன் பெண்சாதியின் தங்கையின் பெயர் உனக்கெப்படி ஞாபக மிருக்கும்?

ரா. [ஒரு காகிதத்தில் மருந்தின் விவரத்தை எழுதி] அம்மா, நீங்கள் ஒன்றும் பயப்படவேண்டிய தில்லேயென்று எண்ணுகிறேன்.—புட்டி மருந்து ஒன்றும், மாத்திரைப் பெட்டியொன்றும் வரும். புட்டி மருந்தை, சாப்பிடுவதற்கு அரை மணி நேரத்திற்குமுன், ஒரு புள்ளி சாப்பிடவேண்டும். சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அந்த மாத்திரையில் ஒன்று உட்கொள்ளவேண்டும்.

[மருந்துச் சீட்டை சாமிநாதனிடம் கொடுத்து]

இதை உடனே சுதேசி மருந்து ஷாப்பிற்கு அனுப்பி வரவழை. இந்த மருந்து வேறெங்குங் கிடைக்காது.

ப. பத்தியம் ஏதாவ துண்டோ?

ரா பத்தியம் ஒன்றுமில்லே. ஆயினும் புளியிட்ட பதார்த்தங்களே மாத்திரம் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டாம். போதும் என்று எப்பொழுது தோன்றுகிறதோ உடனே நிறுத்திவிடவேண்டும். இந்த காபீ டீ முதலியது ஒன்றும் வேண்டாம். அதற்குப் பதிலாக நல்ல பசும்பாலே எவ்வளவு வேண்டுமென்ருலும் சாப்பிடுங்கள்.

ப. அப்படியே ஆகட்டும்.

ரா. இதெல்லாவற்றையும்விட நீங்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன் றுண்டு.

ப. என்ன அது?

ரா. உங்களுடைய மனத்தை எந்நேரமும் சந்தோஷத்திலேயே வைத்திருக்கவேண்டும். துக்ககரமான விஷயங்களைப்பற்றி கவனிக்கலாகாது.

ப. [கண்களில் நீர் ததும்ப, பெருமூச்செறிந்து] அதுதான் முடியவில்லை என்னால்.

ரா. நீங்கள் மாத்திரம் மனம் வைத்தால் எப்படியும் முடியும். ஒரு வார்த்தை சொல்லுகிறேன், அதன்படி நடவுங்கள். ஏதாவது துக்ககரமான விஷயம் மனத்திற்கு ஞாபகம் வரும்பொழுது ஜெகதீசனைக் குறித்துப் பிரார்த்தித்து, அவர் எப்படியும் நமது துன்பங்களையெல்லாம் போக்கி, நமது மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவாரென்று உறுதியாய் நம்பும். இதுவே மார்க்கம்.

ப. நீங்கள் சொன்னபடி செய்கிறேன்.

ரா. மருந்தையும் ஜாக்கிரதையாக கணக்குப் பிரகாரம் சாப்பிட்டு வாருங்கள். நான் புதன்கிழமை வந்து பார்க்கிறேன்.

சா. நாளைக்கு ஒரு முறை வர முடியாதா?

ரா. நாளைக்கு நான் செங்கல்பட்டிற்குப் போகவேண்டியதா யிருக்கிறது. அங்கே ஒரு ஜமீன்தார் பிள்ளைக்கு உடம்பு மிகவும் அசௌக்கியமா யிருக்கிறது. நான் வருவதாகச் சொல்லி யிருக்கிறேன்.

ப. போனபோதிலும் சாயங்கால றெயிலில் வந்துவிடமாட்டீர்களா? அப்புறமாவது கொஞ்சம் வந்துபோனால் —எனக்குத் தைரியமாயிருக்கும்.

ரா. ஆகட்டும்,—அப்படியே செய்கிறேன். அம்மா நீங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம், உங்களுக்கு உடம்பு சீக்கிரம் சௌக்கியமாகும். எல்லாவற்றிற்கும் ஜெகதீசன் இருக்கிறார் என்று நம்பி சந்தோஷமாயிரும்.

ப. ஆம், அவருக்குப் பிறகு எல்லாவற்றிற்கும் உம்மையே நம்பி யிருக்கிறேன் நான்.

சா. நீ ஒன்றும் பயப்படவேண்டாம், அம்மா. எப்படியும் உன்னை சுவஸ்தப்படுத்துவார். தடை யில்லை இனி.

ரா. நான் வருகிறேன்.

ப. வாருங்கள் —நாளைக்கு—

ரா. அவசியம் வருகிறேன். [சாமிநாதனுடன் வெளியே போகிறான்.]

ம. அம்மா, இவர்தாம்மா நல்ல வயித்தியரு, என்ன பேசு ருரு மனசு குளிர! மின்னெ ஒருத்தர் வந்தாரே நாய்க் கரு, எந் நேரமும் சுடுமூஞ்சி வைச்சிக்கினும்! ஆனா, பாத்தா மாத்திரம் சின்ன புள்ளேயாண்டான யிர்க்கு ருரு இவரு—

ப. அதிருக்கட்டும், அண்ணாவிடம் போய் முன்பு அந்த மருந்தை வரவழைக்கச் சொல். [மங்கைத்தாய் போகிறாள்.]

சா. [உள்ளிருந்து] எல்லாம் அனுப்பியாயிற்று. நீ போ.

*மறுபடியும் சாமிநாதன் வருகிறான்.*

சா. பங்கஜம், நான்தான் கெட்டிக்காரன் என்று பார்த் தால் எனக்குமேலே யிருக்கிறாயே நீ! என் யுக்திக்கு மேலாக நீ யுக்தி செய்கிறாயே! அவர் நாளைக்கு வந்தால்தான் உனக்குத் தைரியமாயிருக்குமோ?

ப. போங்க அண்ணா; உங்களுக்கு எப்பொழுதும் விளை யாட்டுதான்.—அந்த மருந்துக்கு சொல்லி யனுப்பி னீரா?

சா. அந்த மருந்துகூட வேண்டியதில்லேபோ லிருக்கிறதே! வைத்தியர் தினம் வந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போனால் போதும்போ லிருக்கிறதே.—இல்லை, யில்லை. விளையாடினால் இதற்கெல்லாமா கோபம்? அவன் குணமெல்லாம் மாறியிருக்கிறது என்று நான் சொன் னதை யிப்பொழுதாவது நம்புவாயா?

ப. அண்ணா, அதிருக்கட்டும்.—ஒரு புறமாக அழைத்துக் கொண்டுபோய் ஏதோ பேசினீரே, அவர் என்ன சொன்னார் அப்பொழுது?

சா. நான் சொன்னது தெரிய வெண்டாமோ?

ப. அதையும் சொல்லும்.

சா. அதை 'யும்' சொல்லும்! உம்,—உனக்கு இது தெரிந் திருக்கவேண்டியது அவசியம். கொஞ்சம் நாளைக்கு முன்பாக இவள் புருஷன் திடீரென்று ஜப்பானுக்குப் போய்விட்டான், அதனால் ஒருவேளை மனங் கலங்கி

யிருக்கலாமென்று சொன்னேன். 'ஆனால் அவனை உடனே வரவழைத்துவிடு, மனம் சந்தோஷமா யிருந்தால்தான் உடம்பும் சவுக்யமாகும் சீக்கிரம்' என்றான். போகும்பொழுதும் 'எப்படியாவது தந்தி கொடுத்தாவது அப் புருஷனை வரவழை' என்று வற்புறுத்திப் போனான். எனக்கு எங்கே சிரித்துவிடுகின்றேனோ என்று பயம்!

ப. அண்ணா, நான் உத்தரவு கொடுக்கும் வரையில் நான் இன்னானென உண்மையை அவரிடம் உரைக்கவேண்டாம்.

சா. அப்படியே ஆகட்டும். நான் உனக்கு உத்தரவு கொடுக்கும் வரையில் நீயும் சொல்லிவிட லாகாது! தெரியுமா?

ப, ஆகட்டும்.—அதேன் அப்படிக் கேட்கிறாய்?

சா. எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன். முன்பு உன்னுடம்பு சவுக்கிய மாகட்டும் நன்றாய்.

ப. மருந்து வந்ததா பாரும். [சாமிநாதன் போகிறான்.]

[பங்கஜவல்லி கண்களை மூடிக்கொண்டு கரத்தைக் கூப்பிப் பிரார்த்திக்கிறாள்,]

காட்சி முடிகிறது.

## மூன்றாவது இடைக் காக்ஷி.

*இடம்—புரசைவாக்கத்தில் ஒரு வீட்டின் கூடம்.*

*கோபாலகிருஷ்ண நாயுடு, ராமானுஜ முதலி, வெங்கடாசலம் பிள்ளை மூவரும் வருகிறார்கள்.*

கோ. ஏண்டா! உங்களுங்கென்னா கெட்டுப்போவ காலம் வந்துதா, என்னா? நேத்து நானு முக்கால் புட்டி பாத்து வைச்சேனே! இதுக்குள்ள கால் புட்டி யாரு காலிபண்ணது?

வெ. என்னாங்க, நான்தான் இந்த பிஸ்தாக் கொட்டெ கிட்ட போறதில்லே இண்ணு ஒங்களுக்கு தெரியுமே. அண்ணைக்கி ஒரு நாளு நீங்களா கொஞ்சம் கொடுத்திங்களே அத்தே திண்ணூட்டு செரிக்காதெ, நாலு அஞ்சு

தரம் வயத்தாலே போச்சே, அது மொதலு நான் அத்தெ கண்ணுலேகூட பார்க்கிற தில்லிங்கோ!

**கோ.** இவன் வேலேயாதா இர்க்கணும், ஏண்டா ராமானுஜம்?

**ரா.** ஐயையோ! எம்பாவமா! எங்கப்பாணே அத்தெ நானு வெரலாலேகூட தொடலே அப்பா!

**கோ.** சரி! சரி! உங்க ரெண்டு பேர்லே யாரானாலும்தாம் எடுத்திர்க்கணும், இப்பவே சொல்லிட்டே! இன்னொரு தரம் கொறெஞ்சுதோ, ரெண்டு பேரும் மறுபடியும் வேலூர் ஜெயிலுக்குப் போகவேண்டியதுதான்!

**வே.** என்னுங்க! கொஞ்சம் மொள்ள பேசுங்க, அவுங்கெல் லாம் நடெயிலே காத்துக்கினு இர்க்கராங்க, கேக்கப் போவுதுங்க!

**கோ.** இப்பவே சொன்னேன், ஜாக்ரதெயா யிருங்க.—அந்த மணெயெ கொண்டாந்து போடு இப்படி. நீ அந்த பானெயெ கொண்டு வா. [அப்படியே செல்கின்றனர். கோபால கிருஷ்ண நாயுடு நிஷ்டையில் இருப்பது போல் உட்கார்ந்துகொள்ளுகிறான்.]

கதவே மெள்ளத் தெறந்து அவங்களே யெல்லாம் வரச் சொல்.

**ரா.** [கதவைத் திறந்து] சந்தடி செய்யாமெ வாங்க.

*சென்னகேசவ முதலியார், மாணிக்கம், கிருஷ்ணன், மங்கைத்தாய், சுந்தரராஜம் முதலானோர் வருகிறார்கள்.*

**எல்லோரும்.** [ஒருவர் பின் ஒருவராய்க் கோபாலகிருஷ்ண நாயுடை நமஸ்கரித்து நிற்கின்றனர்.]

**கோ.** [கண் விழித்து] திரு நீலகண்டம்! திரு நீலகண்டம்!—சிஷ்யா! வரவேண்டியவர்கள் எல்லாம் வந்துவிட்டார்களா?

**வே.** எல்லாம் வந்தூட்டாங்க.

**கோ.** சரி! திரு நீலகண்டம்! சிஷ்யா!—இந்த ஆன்ம கோடிகளுக்கு இந்த நாய், சொல்லவேண்டிய வார்த்தை யிருக்கிறது. இந்த நாய் அந்தக் கடமையை ஒழித்துவிட விரும்புகிறது. அதாவது ஆன்மகோடிகள் கேவலம் இந்த வெள்ளிப் பிசாசிலும் பொன் பிசாசிலும் ஆசை வைப்பது மிகவும் கெடுதியாகும். அப்படியே இந்த

நாயின் குருவின் உபதேசம். இந்த நாய் சொல்ல வேண்டியது சொல்லியாயிற்று, பிறகு அவரவர்களுடைய இஷ்டம்.— சிஷ்யா! அவர்கள் என்ன சொல்லுகிருர்கள் விசாரி.

வெ. என்ன, ஐயா? என்ன சொல்ரிங்கோ? சாமியார் சொன்னத்தெ கேட்டிங்களே?

செ. [மற்றவர்களுடன் கலந்து பேசி] பிஸ்தாக்கொட்டை சுவாமியார் அவர்களுக் கல்லவா, தங்களைப்போன்ற துறவிகளுக்கு ஓடும் பொன்னும் ஒன்றுதான். ஆயினும் சம்சாரத்தில் உழலும் எங்களுக்கு இந்தப் பயித்தியம் உண்டு அதிகமாய். ஆகவே எங்களுக்காக கொஞ்சம் தாங்கள் பெரிய மனது செய்யவேண்டும்.

கோ. ஆனல், திரு நீலகண்டம்! உங்கள் பாடு.— சிஷ்யா! இந்த ஆன்மகோடிகள் கொண்டுவந்திருக்கும் வெள்ளிப் பிசாசுகளை யெல்லாம் சரியாகப் பார்த்து மதிப்பிட்டு ஒரு ஜாபிதாவில் எழுதிக்கொண்டு அந்தப் பானையில் அவர்கள் கையாலேயே போடச் சொல்.

ரா. சாமி, ஜாபிதாவில் எல்லாம் எழுதிக்கொள்ளுகிறேம், மதிப் பென்னத்துக்கு சாமி?

கோ. திரு நீலகண்டம்! என்ன மூடனயிருக்கிருய்? மதிப்பில்லாவிட்டால் மொத்தமாய் பொன்னை பிறகு அவர்களுக்கு ஒன்றுக்குப் பத்தாக பொன் கணக்கா சாரம் கொடுக்க வேண்டாமா?

ரா. ஆமாம், மறந்தேன், மன்னிக்கணும்.—ஒவ்வொருத்தரா கொண்டாங்க—நான் சொல்லிக்கினே வர்ரேன், நீ எழுதிக்கினு வா. [ஒவ்வொருவமாகக் கொண்டு வந்து கொடுக்கிருர்கள்,]

சென்னகேசவ முதலியார்—வெள்ளிக் கால் கொலுசு ஜதெ, ஒண்ணு, சுமார் மதிப்பு அம்பது ரூபாய்—

கோ. சீ! சீ! திரு நீலகண்டம்! ரூபாய் என்று சொல்லாதே, வெள்ளிப் பிசாசு என்று சொல். அந்த வார்த்தை என் காதிலும் படவேண்டாம்.

ரா. அப்படியே! மறந்தேன்! — மங்கைத்தாயம்மாள்— வெள்ளிக் கால் காப்பு கொலுசு ரெண்டு ஜதெ, சுமார்

மதிப்பு நாப்பது—உம்—வெள்ளிப் பிசாசு. சுந்தரராஜ நாய்க்கர்—வெள்ளிக் கிண்ணி ஒண்ணு, நாப்பது வெள்ளிப் பிசாசு.—உம் பேரென்ன? கிருஷ்ணய்யர்—வெள்ளி—உம்—வெள்ளிப் பிசாசு எண்பத்தேழு—உம் பேரென்ன?

**மா.** மாணிக்கம். [ஜெர்மன் வெள்ளிக் கிண்ணியைக் கொடுக்கிறுன்.]

**செ.** [ஒரு புறமாய்] என்னுடா பையா! இதைக் கொண்டுவந்தையே!

**மா.** [ஒரு புறமாய்] அல்லாம் சும்மா இருங்க தாதா. இது கூட பொன்னு பூடும்.

**ரா.** மாணிக்கம், சென்னகேசவ முதலியார் பேரன்—வெள்ளி சின்ன கிண்ணி ஒண்ணு, மதிப்பு பத்து ரூபாய்—உம்—வெள்ளிப் பிசாசு.

[இப்படியே மற்றெல்லோருடைய நகைகள் முதலானவற்றை மதிப்பிட்டு அவரவர்களைக்கொண்டு பாணையில் போடச் செய்கிறுன்.]

**கோ.** சிஷ்யா! திரு நீலகண்டம்!—எல்லாம் முடிந்ததா?

**ரா.** எல்லாம் முடிந்தது, சாமி.

**கோ.** அந்த ஜாபிதாவை ஜாக்கிரதையாக வைத்து வை—இந்த ஆன்ம கோடிகளை யெல்லாம், இன்றைக்கு என்ன தினம்? ஞாயிற்றுக்கிழமையோ, வருகிற ஞாயிற்றுக்கிழமை சரியாக இந்த வேளைக்கு இங்கே வரச் சொல். அதுவரையிலும் இதைப்பற்றி ஒருவரிடமும் பேசக்கூடாதென்று சொல்; பேசுபவர்களுடைய பொருள் பொன்னுக மாருது. ஆகவே மிகவும் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்.

**வெ.** கேட்டுதுங்களா சாமியார் சொல்ரது?

**எல்லோரும்.** கேட்டுது! கேட்டுது! அப்படியே! அப்படியே!

**கோ.** சரி! திரு நீலகண்டம்! இனி இவர்களெல்லாம் விடைபெற்றுக்கொள்ளலாமென்று சொல்.

[எல்லோரும் விடைபெற்றுச் செல்கின்றனர்.]

**செ.** [போகும்போது ஒருபுறமாய் மாணிக்கத்துடன்] ஏண்டா! அது வெள்ளி யல்லவேடா! அதை யேன் கொண்டுவந்தாய்?

மா. அல்லாம் பரவா யில்லே, தாதா. அல்லாம் உருகிப் போனு ஒண்ணுபூடும்! எல்லார்தும் பொன்னுவுறப்போ இதுவும் பொன்னு பூடாதோ, தாதா?
[இருவரும் போகிருர்கள்.]

கி. [ஒருபுறமாய் மங்கைத்தாயிடம்] ஏ! மங்கெத்தாய்! ஒங்க எஜமான் தங்கெக்கி ஒடம்பு சௌக்யமாயிர்க்குதா?

ம. இப்போ ரொம்ப சவுக்யமா யிர்க்குது, ஐயா.

கி. இந்தா, எங்க ஐயரு தினம் வர்ராரே, என்னு செய்யிருரு அங்கே?

ம. அதென்னு, ஐயா, அப்படி கேக்கறியே? அவரு வந்தாருண்ணு, எங்க ஐயரு ஊட்லே இல்லாப்போனு காத்திருந்து, அப்பொறம் அவர் வந்த பொறவு, அம்மாகிட்ட, போயி பேசி மருந்து கொடுக்ருரே! அந்த மாதிரி பேச்சி எங்கிட்ட பேசாதே ஐயா, அப்புறம் எனக்கு கோபம் வரப்போவுது!

கி. நானு என்னு, தப்பா என்னமானு கேட்டனு? ஓ! பலே கோவிச்சிக்கிறையே! [இருவரும் போகிருர்கள்.]

சு. [ஒரு புறமாய்] அப்பவே சந்தேகப் பட்டேன்! சரி மூணு பேரும் ஒண்ணு ஆப்பிட்டாங்களா!
[போகிருன். மற்றவர்களும் போகிருர்கள்.]

கோ. எல்லாம் போனுங்களா பாத்து, கதவை சாத்திக்கினு வாடா!

ரா. [அப்படியே செய்து] சாத்திட்டேட, தெருக் கதவே!

கோ. சரி, அந்த ஜாபிதாவெ எங் கையிலே கொடுத்தூட்டு, இந்த பானெயெ உள்ளே ஜாக்ரதெயா கொண்டு போய்ச் சேருங்க. [அப்படியே செய்கின்றனர்.]

ரா. நானு சொன்னேனே பாத்திங்களா! இந்த யுக்திதான் சரியான யுக்தி! தினம் அஞ்சி ஆறு சம்பாதிச்சி நம்பொ எப்பொ கடத்தேர்ரது? இந்தமாதிரி பத்தாதான் அமுக்கணும்.

வெ. ஆமாம், ஆனலும் இதுலெ கஷ்டமிர்க்குது. ரொம்ப ஜாக்ரதெயா யில்லாப்போனு ஆப்டுக்குவோம். அதல்லாதெ, சீக்கிரம் ரெண்டு மூணு நாளெக்குள்ளோ பொறப்படோணும் பட்டணத்தெ வுட்டு.

கோ. சர்தான், —ராமானுஜம், இண்ணெக்கு, இர்ட்டான ஓடனே, மொள்ள பின் பக்கத்துக் கதவாலே போயி, அந்த சவுக்கார் கிட்ட சுமார் ஒரு அந்நூறு ரூபாய் கொண்டாரச் சொல்லு. இத்தெ யெல்லாம் நம்ப ரூபா யாக்கிக்கினு பூடணும் சீக்கிரம்.

ரா. அப்படியே ஆவட்டும், அப்படியே ஒங்களுக்கு என்ன மாமா, தாவத்துக்கு வாங்கியாரட்டுமா ?

கோ. வேணுண்டா ! அது கெட்ட வழக்கம்.—ஆனாலும் இன்னும் ரெண்டு நாளுதானே— ஒரு ரெண்டு புட்டி வாங்கியா, போதும்.

ரா. ஆவட்டும்.

வெ. அண்ணா, அந்த சுந்தரராஜ நாய்க்கன் நம்பளெயெல்லாம் உத்து உத்து பாத்துக்கினு இர்ந்தா, கவனிச்சிங்களா ?

கோ. உனக்கு எல்லார் பேர்லேயும் சந்தேகந்தான் ! வா, நம்பொ சாமான்களெ யெல்லாம் ஜாக்ரதெயா மூட்டெ கட்டணும். [போகிறார்கள்.]

மூன்றுவது இடைக்காட்சி முடிகிறது.

# மூன்றும் அங்கம்

## முதல் காட்சி

*இடம்—பங்களாவில் ஓர் அறை. காலம்—மாலை.*

*சாமிநாதன் ஒரு காகிதத்தைப் படித்தவண்ணது எகுே,*

சா. நினைத்தேன், அவனாவது பணம் வாங்குகிறதாவது !—

*பங்கஜவல்லி வருகிறள்.*

உம் ! சரிதான் ! — புரோகிதரைக் கூப்பிட்டு நாள் பார்க்கச் சொல்லவா ?

ப. என்னத்துக்கு அண்ணா ?

சா. என்னத்துக்கா ? ஒன்றும் தெரியாத பூனை ! பாவம் !

—ராமசந்திரன் எத்தனை மணிக்கு வருவதாகச் சொன்ஞன் ?

ப. ஆறு மணிக்கு வருவதாகச் சொன்ஞர்.

சா. இனிமேல் என்னத்துக்கு வருவது வயித்தியர் ? உன் உடம்புதான் சவுக்கியமாய் விட்டதே ?

ப. அதுதான் அவரும். சொன்ஞர் நேற்றைத்தினம்; 'நாளைக்கு வந்து உடம்பிற்கு ஏதாவது பலத்திற்கு மருந்து கொடுத்துவிட்டுப் போகிறேன், இனி நான் வரவேண்டிய தில்லை' என்ருர்.

சா. அது வருத்தமா யிருக்கிறப்போ விருக்கிறது; ஆகவே அந்த வருத்தந் தீர இருக்கிற நகைகளில் பாக்கியில்லாமல் எல்லாம் போட்டுக்கொண்டு சிங்காரித்துக்கொண்டாயோ இன்றைக்கு ?

ப. போ, அண்ணு, உனக்கு என்னுடன் தானே விளையாட்டு ?

சா. நான் சொல்லுவ தெல்லாம் உனக்கு விளையாட்டு தான்.—இந்தக் காகிதத்தைப் பார். இதற் கென்ன பதில் சொல்லுகிருய் ?

ப. என்ன அண்ணு? ரூபாயைத் திருப்பிவிட்டாரா என்ன ? [கடிதத்தைப் படித்துப் பார்த்து] ஒருவேளை குறைவா யனுப்பினேம் என்று கோபமோ?

சா. என்ன மூன்ஞறு ரூபாயா குறைவு ? அவன் தான் பணம் வேண்டாமென்று எழுதியிருக்கிருனே.

ப. பின்னை யென்ன வேண்டுமாம் ?

சா. உம்!—உன்னை வேண்டுமாம் !

ப. போங்கான்னேண்ணு, அப்படி யெழுதியிருக்கிருரோ அவர் !

சா. அவன் என்ன மடையஞ அப்படி யெழுதுவதற்கு ? அவன் யெழுதினதற்கு வியாக்யானம் நான் அப்படி செய்கிறேன். அதிருக்கட்டும்.—பணத்தையோ திருப்பி விட்டான்; நாம் ஒன்றும் கொடாமல் இருத்தலும் நல்லதல்ல. இதற் கென்ன செய்வது? ஏதாவது யுக்தி சொல் பார்க்கலாம்.

ப. நேற்று—அந்த வியாபாரி—ஒரு ரவை மோதிரம் விலைக்குக் கொண்டுவந்தானே, அதைக் கொடுத்துவிட்டாற் போகிறது. பணம்தானே வாங்கமாட்டேன் என்றார்.

சா. நல்ல யுக்தி, சரிதான்—ஆனால் அது நானூறு ரூபாய்க்குக் குறைந்து வராதென்றானே!

ப. ஒரு நூறு ரூபாய்தான் அதிகமாய்க் கொடுத்தால் என்ன குறைந்துபோகிறது, அண்ணா?

சா. உனக்கென்ன குறைந்து போகிறது? உனக்கவ்வளவும் லாபந்தானே! எனக்குக் கலியாணமானால் பெண்களே பிறவாதிருக்கவேண்டும். இல்லாவிட்டால் உன்னைப்போல் நான்கு பெண்கள் பிறந்தால் போதும், க்ஷவரம் வேறு வேண்டியதில்லை.

ப. அண்ணா, உங்களிஷ்டப்படியே செய்யுங்கள். அது அதிகமென்று தோன்றினால், வேண்டாம்.

சா. என்ன பயித்தியக்காரி! இதற்குள் முகம் மாறிவிட்டாயே? எப்பொழுது நான் விளையாட்டாகச் சொல்கிறேன், எப்பொழுது உண்மையிற் சொல்கிறேன் என்று கண்டுபிடிக்கமுடியவில்லையே உன்னால்!—ராமசந்திரனுக்கு நானூறு அல்ல நாலாயிரம் கொடுப்பதானாலும் எனக்குச் சம்மதந்தான்.—நான் வெளியே போகவேண்டி யிருக்கிறது. அவன் வந்தவுடன் நான் கொடுக்கச் சொன்னேனென்று சொல்லி அம்மோதிரத்தைக் கொடு. வேண்டாமென்று மறுத்தால் எனக்குக் கோபம் வரும் என்று சொல்.

ப. அப்படியே செய்கிறேன்—இன்னொரு விஷயம் அண்ணா!

சா. என்ன? சீக்கிரம் சொல், நாழி யாகிறது எனக்கு.

ப. இன்னும் எத்தனை நாள், அண்ணா, அவரை யிப்படியேமாற்றி வருவது? அவராக எங்கு கண்டுபிடித்துவிடுகிறாரோ என்று எப்பொழுதும் பயத்தோடிருக்கவேண்டி வருகிறது. அவராகக் கண்டுபிடிக்குமுன் நாமாகச் சொல்லிவிட்டால் நலமென்று தோற்றுகிறது. அப்பொழுதுஅவருக்குக் கோபமும் இராது—அண்ணா, இன்றைக்கு நான் இன்னதென்று சொல்லிவிடவா?

சா. ஓஹோ! அதெல்லாம் உதவாது. நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன். அதையெல்லாம் நீ அவசரப்பட்டு கெடுத்துவிடாதே. அவன் உன்னை யெவ்வளவு வருத் தப்படுத்தினன், அதற்கெல்லாம் தக்கபடி தண்டனை விதிக்கவேண்டும்.

ப. என்ன, அண்ணா? அவர்தான் என்னுயிரைக் காப் பாற்றினரே, அதை யெல்லாம் மறந்துவிடக் கூடா தோ? நான் எல்லாம் மறந்துவிட்டேனே.

சா. நான் மறக்கவில்லை—நான் சொல்கிறபடி கேள். ஒன் றும் கெட்டுப்போகாது. அவன் ஜப்பானிலிருந்து காகிதம் ஏதாவது வந்ததா என்று கேட்டால், 'ஆம், அவர் சீக்கிரம் வருவதாக எழுதியிருக்கிறார்' என்று சொல். பிறகு நான் ஒரு வேடிக்கை செய்கிறேன்.

ப. என்ன வேடிக்கை, அண்ணா? அவர் முகத்தைப் பார்க் கும்போது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது.

சா. நான் சொல்வதைக் கேள். அவன் பிறகு எல்லாம் மிக சந்தோஷப்படுவான்.—நான் ஒரு யுக்தி செய்கிறேன் பார்.

ப. சரிதான், ஆனல்.

சா. ஜாக்கிரதை! என் உத்தரவின்றி வெளியிடுவதில்லை யென்று எனக்குப் பிரமாணம் செய்திருக்கிறாய், பத் திரம்.

ப. உன்னிஷ்டப்படியே, அண்ணா.

சா. நான் வருகிறேன், நேரமாய்விட்டது. [போகிறான்.]

ப. [கடியாரத்தைப் பார்த்து] இன்னும் பத்து நிமிஷ மிருக் கிறது.—மங்கா!—

ம. [உள்ளிருந்து] ஏனம்மா!

ப. அந்தப் புஷ்பம் வந்ததா?

மங்கைத்தாய் வருகிறாள்.

ம. இப்போதுதான் வந்தது அம்மா, இந்தாங்க. [கொடுக்கிறாள்.]

ப. [வாங்கிக்கொண்டு] ஏன் இத்தனை நாழிகையென்று கேட் டாயா?

ம. நீங்க ரோஜாப் பூ இருக்கணு மிண்ணு சொன்னிங் களா. இந்த காலத்துலெ ரோஜாப் பூ ஆப்டரதே கஷ்டம், அதுவும் நல்லதா பாத்து வாங்கிவர நேர மாச்சி யிண்ணு சொல்லச் சொன்ஞன்.

ப. சரிதான் போ. [மங்கைத்தாய் போகிருள்.]
அம்மட்டும் இன்ருவது நல்ல ரோஜாப் புஷ்பம் கிடைத் ததே இந்த காலத்தில். [புஷ்பத்தை அணிந்து]
தனக்கு மிகுந்த பிரியமான புஷ்பத்தை நான் அணிந் திருக்கிறேன் என்பதைக் கவனிக்காமற் போகிருரோ பார்ப்போம். இன்னும் எட்டு நிமிஷம் இருக்கிறது. சரியாக ஆறு மணிக்குத்தான் வருவார். அதுவரையில் நான் என்ன செய்வது?

[மேஜையின் அருகிற் சென்று, அதைத் திறந்து, அதிலிருக்கும் ராமசந்திரன் படத்தை எடுத்துப் பார்த்து]

நான் ஏதோ தவருன எண்ணமுடையவள் என்று எண்ணவேண்டாம். என்மீது இழிவான எண்ணங் கொள்ளவேண்டாம். எனக்கு உம்மிடம் இருக்கும் சுதந்திரம் இவ்வுலகத்தில் வேருெருத்திக்கும் கிடையாது. இதனுண்மையை நீரே சீக்கிரம் ஒப்புக்கொள்வீர், நான் இன்னுளென அறிந்ததும், அப்பொழுது என்னை நீர் மன்னிக்கமாட்டீரா?

[படத்திற்கு ஆர்வமுடன் முத்த மிடுகிருள்.]

ராமசந்திரன் எதிர்ப பக்கத்தில இருக்கும் கதவருகில வந்து நிற்கிறன்.

ப. [படத்தைப் பரபரப்புடன் அறையில் வைத்துச் சாத்திவிட்டு] வாருங்கள், எப்பொழுது வந்தீர்கள்?

ரா. இப்பொழுதுதான்.

ப. நான் பார்க்கவில்லை. நிரம்ப நாழிகையாக நின்று கொண்டிருந்தீரா என்ன? என்னை மன்னிக்கவேண் டும்.

ரா. இல்லை, இப்பொழுதுதான் வந்தேன்.

ப. உட்காருங்கள், ஆறு மணிக்கென்ருல், சரியாக ஆறு மணிக்கு வருவீரே; இன்றைக்கு ஏது ஐந்து நிமிஷம் முன்பாக வந்தது?

ரா. நான் முன்பாக வந்தது தவறுதான். என்னை மன்னிக்கவேணும்.

ப. ஐயோ! அப்படி யொன்று மில்லை. நீர் முன்பாக வந்தது எனக்குச் சந்தோஷந்தான்.

ரா. எங்கே சாமிநாதன்? நான் வந்தபொழுது நேற்றும் இல்லை.

ப. இரண்டு நாளாக ஏதோ அவசியமான வேலை யிருக்கிறதென்று சாயங்காலத்தில் வெளியே போகிறார்.—ஏதாவது அண்ணாவிடம் அவசியமாகப் பேசவேண்டுமோ?

ரா. அப்படி அவசியமான விஷயம் ஒன்றுமில்லை.

ப. ஏழு மணிக்கெல்லாம் வந்துவிடுவார்.—அதுவரையில் தாம் இருப்பதானால்.

ரா. நான் கொஞ்சம் சீக்கிரம் போகவேண்டும்.

ப. என்ன அவசரம்?

ரா. பிறகு சொல்லுகிறேன். கொஞ்சம் கையைக் காட்டு; உனக்கு பலத்துக்கு மருந்தொன்று—

ப. நான் மாட்டேன். நீங்கள்தான் நாங்கள் அனுப்பிய பணத்தைத் திருப்பிவிட்டீரே. உங்களுக்கு விருதாவில் சிரமங் கொடுப்பானேன்?

ரா. யார் உனக்குச் சொன்னது?

ப. நீர் எழுதிய கடிதத்தை நான் பார்த்தேன்.

ரா. உனக்கு இங்லீஷ்கூட படிக்கத் தெரியுமோ?

ப. தெரியும் கொஞ்சம்—

ரா. உனக்கு எதுதான் தெரியாது?—அவன்—சாமிநாதன்—வரட்டும். நா னதில் எழுதிய விஷய மொன்றும் உனக்குத் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டிருந்தால், அந்தக் கடிதத்தையே உனக்குக் காண்பிக்கிறனா?—ஆகட்டும்.

ப. அண்ணா விஷயந்தான் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே. அக் கடிதத்தைக் காண்பியென் றெழுதியிருந்தால் காண்பித்திருக்கமாட்டார்; வேண்டாம் என்றபடியால் காண்பித்தார். அதிருக்கட்டும்.—நீர் அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளப் போகிறீரா என்ன?

ரா. நான்தான் வேண்டாம் என்று எழுதிவிட்டேனே, என்னையேன் தொந்திரவு செய்கிறாய்?

ப. இதென்ன நியாயமாயிருக்கிறது? நீரே யோசித்துப் பாரும். என்னதான் பந்துவாயிருந்தபோதிலும் இத்தனை நாளாகத் தினம் வந்து, எனக்குத் தீராத வியாதியைச் சுவஸ்தப்படுத்தினதற்கு நாங்கள் அவ்வளவாவது நன்றியறிதல் பாராட்டவேண்டாமா?

ரா. நன்றியறிதலுக்குப் பணங் கொடுத்தலன்றி வேறு வழியில்லையா?

ப. வேறு என்ன வழியிருக்கிறது? உமதிஷ்டத்தைச் சொல்லும், அப்படியே செய்கிறோம்.

ரா. [சரேலென்று எழுந்திருந்து; சற்று நிதானித்து மறுபடியும் உட்கார்ந்து] கமலா, என்னை, பணத்தைப் பெறும்படி கேளாதிருப்பதே எனக்கு மிகுந்த திருப்திகரமான நன்றியாகும்.

ப. என்ன ஒருவாறு பேசுகிறீர்கள்?—நான் சொன்னது ஏதாவது கோபமோ?

ரா. ஐயோ! அப்படி யொன்றுமில்லை.

ப. என்மீது ஏதோ கோபமாயிருக்கிறீர்கள்.

ரா. ஐயோ, கமலா, உன்மீது எனக்கு அணுவளவும் கோபமில்லை.

ப. அப்படியானால், நான் சொல்வதைக் கேளும். பணத்தைத்தானே வாங்கிக்கொள்ளமாட்டேன் என்கிறீர்? அதற்குப் பதிலாக வேறு எதையாவது பெற்றுக் கொள்ளுகிறீரா?

ரா. வேறு என்ன கொடுக்கப் போகிறாய்?

ப. கொஞ்சம் இரும். இதோ வருகிறேன்.

[விரைந்து வெளியே போகிறாள்.]

ரா. சீ! அங்ஙனம் நான் எண்ணுவதுந் தவறு! ஆயினும் ஏதோ இவள் மனதிலிருக்கிறது. [எழுந்து உலாவுகிறான்.] இதுதான் சமயம்! [மேஜையைத் திறந்து அதிலிருக்கும் படத்தை எடுத்துப் பார்த்து உடனே வைத்து விட்டுச் சாத்திவிடுகிறான்.]

என்னுடைய படம்! நினைத்தேன்!—ஜகதீசனே! நீர்

தான் என்னைக் காப்பாற்றவேண்டும், ஐயோ! அதை நான் பாராதிருக்க லாகாதா?— பார்த்தது தவறு, அதன் பயனை அனுபவித்தே தீரவேண்டும். ஆயினும் இப்படம் இவளுக்கு எப்படி கிடைத்தது? நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஒரு அடி தவறுக மிதிப்பேனாயினும் நான் அடியோடழிந்தவனே!

*மறுபடியும் பங்கஜவல்லி வருகிறாள்,*

ப. [ஒரு மோதிரத்தை ராமசந்திரன் கையிற் கொடுத்து] இது உமக்குச் சரியாக இருக்கிறதா பாரும்.

ரா. கமலா, இதென்ன! நான் பணமே வேண்டாமென்றேனே, இதைக் கொண்டுவந்து கொடுக்கிறாயே? எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் சொல்வதைக் கேள்.

ப. இதென்ன, இப்படிப் பேசுகிறீரே நீர்? பணந்தான் வாங்கமாட்டேன் என்றீர். இதைப் பெற்றுக் கொள்ளுவதற் கென்ன?

ரா. இந்தா, நான் சொல்வதைக் கேள்; இதை வாங்கிக் கொள்.

ப. நான் மாட்டேன், அண்ணா இதையும்மிடங் கொடுத்து, இதை வாங்கிக்கொள்ளமாட்டேன் என்றால் தனக்குக் கோபம் வருமென்று சொல்லச் சொன்னார்.

ரா. அவனுக்குக் கோபம் வந்தால் வரட்டும். நீ இதை வாங்கிக்கொள்.

ப. நான் மாட்டேன், பிறகு அண்ணா கோபித்துக்கொள்வார்.

ரா. கமலா, நான் சொல்வதைக் கேள். உன் அண்ணன் இதைக் கொடுக்கச் சொன்னது உண்மைதானே?

ப. ஆம்.

ரா. அதன்படி எனக்குக் கொடுத்துவிட்டா யல்லவா?

ப. ஆம்.

ரா. என்னுடையதை நான் என்ன வேண்டுமென்றாலும் செய்யலா மல்லவா?—நான் இதை உனக்குக் கொடுக்கிறேன், பெற்றுக்கொள்.

ப. நல்ல நியாயமா யிருக்கிறதே!—அப்படித்தான் ஆகட்டும், கொடும். [மோதிரத்தை வாங்கிக் கொண்டு] உம்முடைய நியாயப் பிரகாரம் இது இப்பொழுது என்னுடைய தல்லவா? நான் இதை என்ன வேண்டுமென்றாலும் செய்யலாமல்லவா?—நான் உமக்குக் கொடுக்கிறேன், பெற்றுக்கொள்ளும். இப்பொழுது எப்படி வேண்டாமென்று சொல்லுகிறீரோ பார்ப்போம்! வாங்கிக் கொள்ளும்.

ரா. ஈசனே! ஜகதீசனே!—கமலா, உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன். என்னைத் தொந்திரவு செய்யாதே.

ப. நான் செய்வது தொந்திரவா? நீர் செய்வது தொந்திரவா? இத்தனை நாளாக சாகக் கிடந்த என்னை எமன் வாயினின்றுந் தப்பிப் பிழைக்கச் செய்த உமக்கு நான் ஒன்றுங் கொடுக்கலாகாதா? பணத்தைத்தான் வாங்கமாட்டேன் என்றீர், இதையாவது பெற்றுக் கொள்ள லாகாதா?—என் கையினின்றும்—என் ஞாபக மிருக்கும்பொருட்டாவது—

ரா. [ஒரு புறமாக] ஈசனே, என்னைக் காத்தருளும் இச் சமயம்.

ப. என்ன யோசிக்கிறீர்? இதில் என்ன தவறு?

ரா. ஒன்றுமில்லை! கொடு.

[வாங்கி ஜேபியில் வைத்துக்கொள்கிறான்.]

ப. உம்முடைய ஜேபியில் வைத்துக் கெள்ளவா இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொடுத்தேன் நான்?

ரா. [மோதிரத்தை யெடுத்து விரலி லணிந்துகொண்டு] இப்பொழுது திருப்திதானா?

ப. திருப்திதான்—ஆனால் ஒன்று உம்முடைய நியாயப் பிரகாரம் உம்முடைய தாய்விட்டது மறுபடியுமென்று வேறு யாருக்குங் கொடுத்துவிடாதீர்.

ரா. இல்லை, இல்லை. என் னுயிர் போமளவுங் கொடேன்.—கமலா, நான் வருகிறேன்.—எனக்குக் கொஞ்சம் அவசரமான வேலை யிருக்கிறது.

ப. என்ன இதற்குள் அவசரம்?

ரா. இல்லை,—கொஞ்சம் முக்கியமான வேலை.—மன்னிப்பாய்.

ப. என்ன அவ்வளவு முக்கியமான வேலை?

ரா. இல்லை,—நான் போகவேண்டும்.—நாழியாய்விட்டது.

ப. என் கை பார்த்து இன்றைத்தினம் ஏதோ பலத்துக்காக மருந்து கொடுப்பதாகச் சொன்னீரே, அதைக் கூட மறந்து புறப்பட்டுப் போகும்படியான அவ்வளவு முக்கியமான வேலை என்னவோ?

ரா. ஆம, ஆம், மறந்தேன் அதை மன்னிப்பாய்.

ப. இல்லை, உமக்கு அவசரமா யிருந்தால் நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்.

ரா. நாளைக்கா?— இல்லை, இப்பொழுதே பார்த்துவிடுகிறேன்.—கொஞ்சம் உன் கையைக் காட்டு.

[நாடியைப் பார்க்கிருன்.]

ப. என்ன உங்கள் கை நடுக்குகிறதே?

ரா. கொஞ்சம் பல ஹீனம்,....கொஞ்சம் புத்தி ஹீனம்!

ப. என்ன ஒரு மாதிரியாய்ப் பேசுகிறீர்கள் இன்றைக்கு?

ரா. ஒன்றும் விசேஷமில்லை.— [சீட்டு ஒன்று எழுதுகிருன்.] இந்த மருந்தை சாப்பிடுவதற்கு அறை மணி நேரத்துக்கு முன் இரண்டு தேயிலைக் கரண்டி அளவு, வெந்நீரில் சாப்பிட்டு வா. இனி வேறொன்றும் வேண்டியதில்லை. ஒரு மாதம் இதைச் சாப்பிட்டுவிட்டு நிறுத்திவிடு.

ப. ஆனல்—இனிமேல் வரமாட்டீரா?

ரா. இனி நான் வரவேண்டிய அவசியமில்லை. உனக்கு உடம்பு எல்லாம் சவுக்கியமாய்விட்டது. இனி ஒரு பயமு மில்லை.

ப. எப்பொழுதாவது--அண்ணாவைப் பார்ப்பதற்காவது--வரமாட்டீரா?

ரா. இல்லை, நான் தெற்கே யாத்திரை போகலா மென்றெண்ணி யிருக்கிறேன். வருவதற்கு—நெடுநாளாகும்—என்று நினைக்கிறேன்.

ப. இதுவரையில் — எங்களுக்கு — சொல்லவில்லையே அதைப்பற்றி?

ரா. இல்லை, இன்றுதான் தீர்மானித்தேன்.—நான் போய் வரவா?

ப. நாழியாய்விட்டதே, கொஞ்சம் பலஹாரம் பண்ணி விட்டுப் போகிறீரா? அண்ணாவும் வந்து விடுவார் சீக்கிரம்.

ரா. இல்லை, மன்னிக்கவேண்டும், நேர மாய்விட்டது.

[தன் பையைக் கையிலெடுத்துக்கொண்டு]

உம்—ஜப்பானிலிருந்து ஏதாவது பதில் வந்ததா?

ப. ஆம், அதைச் சொல்ல மறந்தேன். சீக்கிரம்—அவர் புறப்பட்டு வருவதாக எழுதியிருக்கிறாராம். அண்ணா சொல்லச் சொன்னார்.

ரா. சந்தோஷம்.—கமலா, ஒரு சிறிய வேண்டுகோள்.

ப. என்ன சொல்லும்.

ரா. நேற்றைத்தினம் நீ பாடிய பாட்டை இன்னொரு முறை கேட்க விரும்புகிறேன்.

ப. அந்த புஸ்தகம் இங்கில்லை. அதுதான் வேண்டுமோ அல்லது வேறு ஏதாவது பாடட்டுமா?

ரா. இல்லை, அந்த பாட்டைதான் கடைசி முறை கேட்க விரும்புகிறேன்.

ப. ஆனால், அந்த புஸ்தகத்தை தேடி எடுத்துக்கொண்டு வருகிறேன்.

[விரைந்து போகிறாள்; போகும்பொழுது தலையிலிருந்த ரோஜாப் புஷ்பம் கீழே விழுகிறது. அதை ராமசந்திரன் கையிலெடுத்துக்கொள்கிறான். அவனறியாதபடி, போன பங்கஜவல்லி திரும்பிவந்து, அதை க்ஷணப்பொழுது பார்த்துவிட்டு, மறுபடியும் விரைந்து போகிறாள்.]

ஜகதீசனே! நானிழைக்கும் பிழையெல்லாம் இவ்வளவே! மன்னியும் என்னை!

[புஷ்பத்தை முத்தமிட்டுத் தன் ஹிருதயத்தில் வைத்துக் கொள்கிறான்.]

பஙகஜவலலி ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வருகிறாள்.

ப. [தன் பின்னலைத் தொட்டுப் பார்த்து] என் தலையில் அணிந்திருந்த ரோஜாப் புஷ்பம் இங்கே ஏதாவது விழுந்ததா?—நீர் பார்த்தீரா அதை?

ரா. ரோஜா புஷ்பந்தானே? அதற்காக அவ்வளவு தேடுவானேன்?

ப. அது எவ்வளவு அழகான புஷ்பம்! அது எனக்கு மிகவும் பிரியமா யிருந்தது.

ரா. அது போனால்போகட்டும்.—எனக்கு நேர மாகிறது. அந்தப் பாட்டைச் சற்று பாடு.

ப. [புன்னகையுடன்] இதோ—

[பெட்டியைத் திறந்து ஸ்ருதியாக வைத்துக்கொண்டு புஸ்தகத்தைப் பார்த்துப் பாடுகிருள்.]

"விண்படைத்த புகழ்தில்லை யம்பலத்தா னெவர்க்கும்
மேலாளு னன்பருள மேவு நடராஜன்
பண்படைத்த வெனையறியா விளம்பருவந் தனிலே
பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்களெல்லாம் அவமதித்தே வலது
பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சி யெனலானேன்
கண்படைத்துங் குழியில்விழ கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி"

ரா. கமலா, இந்தப் பாட்டை இவ்வளவு அழகாயும் உருக்கமாயும் பாட, உனக்கு யார் கற்றுக் கொடுத்தது?

ப. ஒருவரும் எனக்கு கற்பிக்கவில்லை, நானே கஷ்டப்பட்டு கற்றுக்கொண்டேன்.

ரா. ஏன்?

ப. எனக்கு வெட்கமா யிருக்கிறது சொல்ல.

ரா. வெட்க மென்ன இதில்?

ப. என் கணவருக்கு சங்கீதத்தில் பிரியமென்று கேள்விப்பட்டேன். ஆகவே அவருக்கு சந்தோஷத்தை யுண்டாக்கு மென்று அதைக் கற்றுக்கொண்டேன்.

ரா. கமலா, இதற்கு வெட்கப்படுவானேன்? சந்தோஷமல்லவோ கொள்ளவேண்டும்? பதிவிரதைகளுக்கு அது தான் அழகு. உலகத்திலுள்ள பெண்மணிகளெல்லாம் உன்னைப்போல் கற்றறிந்து தங்கள் கணவனுக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணுவராக!—கமலா, நான் வருகிறேன். ஜகதீசன் கிருபையால் உன் கணவனைச் சீக்கிரம் அடைந்து அவனால் புகழப்பட்டு வாழ்வாயாக!

ப. அங்ஙனந்தான் நான் தினந்தோறும் பிரார்த்திக்கிறேன்.—நீரும் என்பொருட்டு பிரார்த்தியும்.

ரா. அங்ஙனமே சத்தியமாய்ப் பிரார்த்திக்கிறேன், என் முழு மனதுடன்! கமலா, நான் வருகிறேன். ஒரு கடைசி வேண்டுகோள். நீ தினம் ஈசனைக் குறித்து பிரார்த்திக்கிறாய், எனக்குத் தெரியும். அப்படிச் செய்யும்போது, எப்பொழுதாவது என் ஞாபகம் வந்தால் என் பிழைகளுக்காக என்னை மன்னிக்கும்படி—உன் வாயால் வேண்டுவாய்—செய்கிறேன் என்று ஒரு வார்த்தை சொல்.

ப. ஆகட்டும்—அதேன் அப்படி கேட்கின்றீர்? நீர் தவறிழைப்பதாவது?

ரா. அதை நான் இறந்தபின் அறிவாய்! கமலா, நான் வருகிறேன்! [சரேலென்று போகிறான்.]

காட்சி முடிகிறது.

## நான்காவது இடைக் காட்சி.

*இடம்—சென்னை ரெயில் ஸ்டேஷன்.* *காலம்—மாலை.*

*அநேகர் வந்து டிக்கெட் வாங்கிக்கொண்டு போகின்றனர்*

*போலீஸ் உடையி லில்லாத சுந்தரராஜனுடன் பேசிக்கொண்டு ஒருபுறமாய் சாமிநாதன் வருகிறான்.*

*நாராயணசாமி ஒருபுறமாய் உலாவிக்கொண் டிருக்கிறான்.*

சா. [ஒருபுறமாக அவனுடன்] அந்த இரண்டு கைதிகளையும் ஒவ்வொரு கான்ஸ்டபிளுடன் அந்த மூன்றாவது கிளாஸ்

டிக்கட் கேட்டருகில் ஒருவனையும், இந்த வாசற்படி யருகில் ஒருவனையும், நிறுத்திவை. அவர்க ளிருக்கும் மாறு வேஷத்துடனேயே இருக்கட்டும். இந்தப் பழய ஆசாமியை அவர்களில் யாராவது கண்டுபிடித்துக் கொடுத்தால் அந்த இனும் அவர்களுக்கே கொடுக்கிற தாகச் சொல். போ, ஜாக்கிரதை.

[சுந்தரராஜன் போகிருன்.]

*சென்னகேசவ முதலியார் மாணிக்கத்தை அழைத்துக்கொண்டுவருகிறர்.*

**சே.** என்னங்க! — உங்களைத்தான் தேடிக்கொண்டு வந்தேன். ஆசாமிகளை பிடித்ததாகச் சொன்னர்கள். என் சொத்து ஏதாவது அகப்பட்டதா என்று விசாரிக்க வந்தேன்.

**சா.** இரண்டு கைதிகள்தான் அகப்பட்டார்கள். மூன்ருவது ஆசாமியைக் காணும்.

**மா.** என்ன தாதா, அந்த பெரிய கழுதெ ஆப்பிடலியே?

**சே.** அடே! சும்மா யிருடா! வயிறு பற்றிக்கொண்டு எரிகிறது! [முதல் மணி அடிக்கிறது.]

கோபால்கிருஷ்ண நாயுடு ஒரு சாயபைப் போல் வேஷம் தரித்து ஒரு சிறு பையை எடுத்துக்கொண்டு வருகிருன்.

**கோ.** அரே! மொதல் மணி அடிச்சுப்பூட்டான்! ரொம்ப கும்பல்கி இர்க்கரா! டிக்கட் நம்பள் எப்படி வாங்கிரா? —ஹஜ்ரத், நம்பள் கனிஷ்டபர் கிட்ட அனுப்பி நம்பள்கு ஐதராபாத்கு ஒரு டிக்கட் வாங்கராங்கோ, ரொம்ப சலாம்.—

**சா.** அடே அந்த ரூபாயை வாங்கி அவருக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொடு.

**கோ.** சக்கென்ட் கிளாஸ், ஏக் டிக்கட்!

[ரூபாயைக் கொடுக்கிருன்.]

**மா.** தாதா! தாதா! இவரு பிஸ்தாக்கொட்டெ சாமியாராட்டமிருக்கருரு தாதா!

**சே.** அடே! பையா பேசாம விரு!

[அவன் தலையில் குட்டுகிருர்.]

**கோ.** ஏ! அடிக்காதே பாய்!—பையன்கி என்ன வோணும், பிஷ்தா கொட்டெ ஹோனு?

மா. உம்! உம்! — நீங்க வோணுமிண்ணு பாருங்க! அவர் மூக்குலே— காயம்பட்டிருந்துதே! [அழுகிறன்.]

மாறு வேடம் பூண்டிருக்கும், கைதியாக்கப்பட்ட ராமானுஜ முதலி தன்னருகிலிருக்கும் கான்ஸ்டபில் நாராயணசாமியை மீறிக்கொண்டு ஓடி வருகிருன்.

ரா. ஆமாம்! ஆமாம்! இவன்தான்! இவன்தான்!

[கோபாலகிருஷ்ண நாயுடு தாடியைப் பிடித்து இழுத்துவிடுகிருன்.]

சா. [கோபாலகிருஷ்ண நாயுடைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு.] காட்டாளி கோபாலன்! உன்னைக் கைதியாக்குகிறேன்.

[அவன் திமிறப் பார்க்க]

நாராயணசாமி! போடு விலங்கை!

[விலங்கைப் பூட்டுகிறார்கள்.]

ரா. அப்பா! அப்பா! என்னெ—கொஞ்சம் உடேன்! என் மனசாற ஒதெச்சி விட்டுடறேன்!

மற்றொரு கான்ஸ்டபில் வெங்கடாசலம் பிள்ளையுடன் வருகிருன். கும்பல் சேர்கிறது.

வெ. அப்பா! புடிச்சிக்கிணுங்களா! போதும், என்னெ எத்தனி வருஷம் வோணுமிண்ணலும் மண்ணுக்கு போடுங்க! எங்க சாமியாரு எங்கே தப்பிச்சிக்கிருரோ இண்ணு பாத்தே! ஏ! பிஸ்தாக்கொட்டே! வா எங்களோடே! அங்கே நம்ப பாட்ஞரு ஊட்டுக்குப் போனு இந்த பேரு வைச்சிக்காதே! களிமொத்தெ சாமியாரிண்ணு பேர் வைச்சிக்கோ!

சா. அடே! அப்படியே ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போங்கள்; ஜாக்கிரதை! —என்ன கும்பல் இங்கே? போங்கள் எல்லோரும்!

[மூவரையும் அழைத்துக்கொண்டு போகின்றனர். கும்பலாக ஜனங்கள் 'பிஸ்தாக்கொட்டெ சாமியார்! பிஸ்தாக்கொட்டெ சாமியார்' என்று ஏளனம் செய்துக்கொண்டு போகின்றனர்]

செ. ஐயா! என் சொத்து ஏதாவது கிடைக்குங்களா?

சா. [கோபாலகிருஷ்ண நாயுடு பையைத் திறந்து பார்த்து] எல்லாம் சவரனுக மாற்றிவிட்டான் ஆசாமி! அது கிடைத்தாலும் கிடைக்காமற்போனலும்—உங்கள் பையனை

இவன் ?—இவனுக்கு இரு நூறு ரூபாய் இனும் கிடைக்கும், இவன்தான் முதலில் கண்டுபிடித்தான் ஆசாமியை !

*கிருஷ்ணன் விரைந்து வருகிறான்.*

கி. எங்கே? எங்கே? எங்கே ஐயா அவரு? றெயில்லே பூட்டாரா, என்ன?

சா. யார்?

கி. எங்க பிஸ்தா கொட்டெ சாமியாரு?

சா. போடா! தடியா! அப்பொழுதே சொன்னேனே கேட்டாயா? ஏமாந்த சோணகிரி! உங்க பிஸ்தா கொட்டெ சாமியாரே விலங்கிலே போட்டு ஸ்டேஷனுக்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள், போய்ப்பார்.

கி. என் எண்பத்தேழு ரூபா! பூட்டதுதானா?—அத்தெ மாத்திரம் வாங்கிக் கொடுத்துடுங்களே! நானு கண்ணாலம் பண்ணிக்க சேத்துவைச்சிருந்தேனே?

[அழுகிறான்.]

சா. எல்லாம் பார்க்கலாம். —அந்தக் காகிதத்தை உங்கள் ஐயரிடம் கொடுத்துவிட்டாயா?

கி. காலம்பற மொதலு இந்த பிஸ்தாகொட்டெ சாமியாரெ தேடி தேடி இந்த வயத்தெரிச்சல்லெ அத்தெ கொடுக்க மறந்து பூட்டேன்! அவரு மெத்தெ மேலே கதவெ சாத்திக்கினு வேலெயா யிர்க்கிறாரு!—

[காகிதத்தை வெளியே எடுக்கிறான்,]

சா. சீ! கொடு இப்படி! [அதைப் பிடுங்கிக்கொண்டு]

கி. ஐயா! சாமியாரே எந்த பக்கம் அழைச்சிக்கினு போறாங்க?

சா. என்ன சங்கடம்! அவள் நினைத்தபடி ஏதாவதிருந்தால்! கூப்பிடடா என் மோட்டார் வண்டியை!

[போகிறான்.]

கி. ஐயா, பிஸ்தா கொட்டெ சாமியாரே எந்த பக்கம் அழைச்சிக்கினு போனாங்க?—நான் போய் கேட்டுப் பாக்கறேனே!

சே. இந்தப் பக்கம் கொண்டுபோனார்கள்.

[கிருஷ்ணன் விரைந்து போகிறான்.]

மா. நானு அப்பவே சொன்னு நீ கேக்கமாட்டேண்ணையே தாதா! இந்த சாமியாருங்களே யெல்லாம் நம்பக் கூடாது தாதா! ஏன் தாதா? ஜெயில்லே போட்டாங் கண்ணு, அவருக்கு பிஸ்தா கொட்டெ கொடுப்பாங் களா தாதா?

சே. அடே! புத்திசாலிதான், வா, போவோம்.

மா. நான் புத்திசாலி யில்லேயோ! நீதான் வெள்ளிக் கிண்ணியெ கொடுத்தியே பிஸ்தா கொட்டெ சாமியாருக்கு, நானு ஜெர்மன் சில்வர் கிண்ணந்தானே கொடுத்தேன்.

சே. அடே அதனப் பிரசிங்கி! போதும், வா போவோம்.

மா. என்னு தாதா? ஜெயில்லே போட்டாங்கண்ணு அவருக்கு பிஸ்தா கொட்டெ கொடுக்கமாட்டாங்கல்லா? பாவம்! [போகிறார்கள்.]

நான்காவது இடைக் காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

*இடம்—ராமசந்திரன் வீட்டின் மாடியில் தாழ்வாரம். காலம்—இரவு.*

*ராமசந்திரன் யோசித்தவண்ணம் உட்கார்ந்திருக்கிறான்.*

ரா. இந்த உலகில் விந்தைகளுக்குக் குறைவில்லை!—இது நான் பிறந்த தினம்! இதுவே இறக்கும் தினம்!—நிலவு என்ன அழகாய்க் காய்கிறது! குளிர்ந்த காற்று என்ன சுகமாய் வீசுகிறது!—இன்றுதான் இவைகளின் சுகத்தை யனுபவிக்கின்றேன்.— நான் பார்ப்பவைகளெல்லாம் என்ன அழகாய்த் தோற்றுகின்றன! இதுவரையில் ஏன் இவைகளை அறியா திருந்தேன் நான்? பிரியும் காலத்தில்தான் அவைகளின் பெருமை தோன்றும் போலும். சரி! இனி யோசிப்பானேன்? [எழுந்திருக்கிறான்.]
ஈசனே! நான் எவ்வளவு பிரார்த்தித்தும் ஏன் உமக்கு என்மீது கருணை யில்லாமற் போயிற்று? ஜன்மாந்தரத்தில் நான் ஏதோ தவறிழைத் திருக்கவேண்டும்.

அல்லது இந்த ஜன்மத்திலேயே நான் பாவ மிழைத் தேனே?—விவாக விஷயத்தில் என் தந்தைக்கு நான் துக்கம் பெரிதும் விளைத்தேன். அதற்காக நான் செய்யவேண்டிய பிராயச்சித்தம் இதுவோ? ஆயினும் நான் உயிரோ டிருப்பேனாயின் அதனிலும் பெரும் பாவ மிழைப்பேன்! பிறகு?—இதுவரையில் இவ்வுல கில் நான் நற் பெய ரெடுத்ததெல்லாம் எதற்காகும்? இப்பொழுது என்னைப் புகழ்ந்து பேசும் உலகம், என் னைக் குறித்து நகைப்பதற் கிடங் கொடுப்பதா? என் தந்தை என்னைக் குறித்து வெட்கப்படும்படியான செய்கையை நான் புரிவதா?—அதெல்லா மிருக்கட் டும்.—நான் கொண்டது உண்மையான, மேம்பட்ட காதலானல், அவளது நலத்தை நாடுவதே அதற்கு அறி குறியாகும். அவளது கற்பைக் காத்த லன்றி நான் அவளுக்குச் செய்யத் தக்க பேருதவி வேறென் னும்?—நான் உயிருட னிருப்பேனாயின் அவளுக்கும் கஷ்டம், எனக்கும் கஷ்டம்; ஆகவே என் உயிரைக் கொடுத்து அவளது கற்பைக் காப்பதே என் கடமை! —ஈசனே! அந்தப் பெரும் புண்ணியம் செய்தற் பொருட்டு இச் சிறு பாப மிழைக்கிறேன். என்னை மன்னியும்!—வேறு யோசனையாற் பிரயோஜன மில்லை. நான் இறந்தால்தான் என்னை மறந்து தன் கணவனுடன் சுகமாய் வாழ்வாள்! இனி யோசிப்பதிற் பயனில்லை.— [பெட்டியைத் திறந்து ஒரு புட்டியை எடுக்கிறான்.]

இப்படி இறக்கவேண்டிவரும் என்று எப்பொழுதாவது யோசித்தேனே?—என்ன விந்தை! காலைமுதல் என் இறந்துபோன மனைவியாகிய அச்சிறு பெண்ணின் ஞாபகமே அடிக்கடி வருகிறது. அவள் இறந்தபொழு து, நம்மை அக்கினி சாட்சியாக மணந்த புருஷன் நம்மைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை யல்லவா என்று நினைந்து வருந்தி யிருப்பாள். அதன் பலனை அனுபவிக்கிறேன். — ஜகதீசா! இப்பெண்மணியை நான் மணந்திருக்கும்படி என் தலையில் வரைந்திருக்க லாகாதா?

[தெருவில் ஓரு சப்தம் "அப்படித்தானையா இன்றேன்"]

யார் அது? [புட்டியை மேஜையின்மீது வைத்துவிட்டு' சுவரண்டையிற் போய்ப் பார்க்கிறான்,]

யாரோ தெருவில் பேசிக்கொண்டு போகிறார்கள்.—

[கடியாரத்தைப் பார்த்து,]

எட்டாகப் போகிறது. இனி நான் தாமதிக்கலாகாது.

[புட்டியைக் கையில் எடுக்கிறான்; குண்டு போடுகிறது.]

இதற் கென்ன அர்த்தம்?—சீ! இதிலெல்லாம் என்ன இருக்கிறது? [மேஜையின்மீ திருக்கும் தன் தந்தையின்படத்தைப் பார்த்து]

அண்ணா! என்னை மன்னியும்! உம்மிடம் வருகிறேன்! நீர் கூறியதுபோல், நான் இப்படி இறக்கவேண்டு மென்று என் தலையில் எழுதியிருந்தால், அதைத் தடுக்க யாராலாகும்?

[புட்டியைத் திறந்து வாயருகில் கொண்டு போகிறான்- தந்தையின் படம் மேஜை மீது சாய்ந்து விழுகிறது.]

இல்லை! இல்லை! அண்ணா!—என்ன ஆச்சரியம்! இப் பொழுது யாராவது என்னைப் பார்த்தால் நகைப்பார் கள்!—இது எப்படி விழுந்தது?

[புட்டியை மேஜையின்மீது வைத்துவிட்டு, அப் படத்தை யெடுத்து]

அம்மட்டும் ஒன்றும் உடையவில்லை!

[அதற்கு முத்தமிடுகிறான்!]

அண்ணா! என்னை நீர் இப்படி பரிசோதிக்கலாமா? நான் ஒரு பாபமு மிழையேன்! நான் கமலாவையும் பெறவேண்டும். இதற்கு வழி சொல்லும் —சீ இதென்ன பேதமை!

[படத்தை மேஜையின்மீது வைத்து]

ஈஸ்வரனாவது? தலை விதி யாவது! பார்ப்போம் எல் லாம் க்ஷணத்தில்! [சடுதியில் புட்டியை எடுக்கிறான்.]

சா. [மெத்தைப் படியி லிருந்து] ராமசந்திரா? ராமசந்திரா?

ரா. யார் அது? சாமிநாதன்!—இதென்னடா சங்கடம்!

சா. ராமசந்திரா? ராமசந்திரா? [கதவைத் தட்டுகிறான்.]

ரா. இதோ வந்தேன். பொறு! பொறு!

[புட்டியை மேஜையின் மீது வைத்து ஒரு சவுக்கத்தால் மூடி விட்டுப் போய்க் கதவைத் திறக்கிருன்.]

சாமிநாதன் விரைந்து வருகிறன்.

சா. என்ன இது?—என்ன செய்துகொண் டிருந்தாய்?—சாப்பிட்டாயிற்ரு?

ரா. இல்லை—இன்னும்.

சா. பூஜைமாத்திரம் முடிந்தாற்போ லிருக்கிறது.—கதவை ஏன் சாத்தி வைத்தாய்? எனக்கா இக் கடிதம்?

[மேஜையின் மீதிருக்கும் கடிதத்தை எடுக்கப் போகிருன்,]

ரா. [அவன் கையை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு] சாமிநாதன், அதைப் படியாதே இப்பொழுது, உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன்.

சா. [சரேலென்று மற்றொரு கையால், மூடியிருந்த சவுக்கத்தை எடுத்து, புட்டியைப் பார்த்து] ஓ! நினைத்தேன்! அவள் சந்தேகப் பட்டது உண்மைதான்! அம்மட்டும் சமயத்தில் வந்தேன்.—ராமசந்திரா, என்ன இது?

ரா. சாமிநாதன், என்னை வெறுக்காதே. நீ அக் கடிதத்தைப் படித்துப் பார்ப்பாயாயின், நான் நீ எண்ணும் படியான அப்படிப்பட்ட பாதகன் அன்று, என்பதை அறிவாய்.

சா. கடிதத்தைப் படிக்காமலே நான் அதை ஒப்புக் கொள்ளுகிறேன்· இப்பொழுது நீ செய்யத் துணிந்ததை நீ செய்திருப்பாயாயின் அப்பொழுதே நீ மஹா பாதகனு யிருப்பாய். உன்னை நான் வெறுத்தும் இருப்பேன். அம்மட்டும் சமயத்தில் வந்தேனே! இதைத் தடுத்தேனே தெய்வாதீனத்தால்!

ரா. சாமிநாதன், என் நியாயம் நீ அறிகிலை. அக் கடிதத்தைப் பிரித்து முற்றிலும் படித்துப் பார்த்து பிறகு நான் செய்யத் துணிந்தது தவரு அன்ரு என்று நீயே சொல்.

சா. அந்தக் கடிதத்தில் நீ என்ன எழுதியிருக்கிருய் என்று

எனக்குத் தெரியும். அதற்குப் பரிபூரணமான பதில் இதில் இருக்கிறதா இல்லையா பார்.

[தன்னிடமிருந்த கடிதத்தை அவன்முன் எறிகிறான்.]

இதைப் படித்தவுடன் உன்னைப் போன்ற முழு முண்டம் உலகத்திலேயே இல்லையென்று ஒப்புக்கொள்ளுகிறாயா இல்லையா பார்ப்போம்.

ரா. [அக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கிறான்.] என்ன !—

சா. அவசரப்படாதே! முழுவதும் படி, முழு முண்டம்!— நான் காலை இதைக் கிருஷ்ணனிடம் கொடுத்து உன்னிடம் கொடுக்கச் சொன்னால், என்னமோ வேலையாயிருக்கிறார், ஒருவரும் தன்னைத் தொந்திரவு செய்யக் கூடாதென்றார், அப்புறம் கொடுக்கிறேன், என்றான். நான் என்னவோ வேலை யிருக்குமென் றெண்ணி, சரிதான் என்று போய்விட்டேன், — தாங்கள் இந்த வேலைக்கு எல்லாம் சித்தம் செய்துகொண் டிருந்தாற்போ லிருக்கிறது! அம்மட்டும், சற்று முன்பாக இன்னும் இக்கடிதத்தை உன்னிடம் சேர்ப்பிக்கவில்லை என்று அவனிடமிருந்து நான் அறிந்திராவிடின், நான் சாவகாசமாய் வந்திருப்பேன். நீயும் இறந்திருப்பாய் சாவகாசமாய்! பங்கஜவல்லியை இம்முறை உண்மையில், கொன்றிருப்பாய்!

ரா. சாமிநாதன், இதெல்லாம் உண்மைதானா?

சா. முண்டமே, இன்னும் என்ன சந்தேகம்?

ரா. சத்தியமாய்?

சா. சத்தியமாய்!—கொஞ்சம் பொறு. வேண்டுமென்றால் பங்கஜவல்லி நேராக வருவாள், அவளையே கேட்டுப் பார்! [எழுந்திருந்து கதவருகிற் போய்] அடே! கிருஷ்ணா!

*கிருஷ்ணன் வருகிறான்.*

கி. ஏன்?

சா. என் வண்டி போய்விட்டதா பார்?

கி. மோடார் வண்டிதானே? அது அப்பவே கூச்சல் போட்டுட்டு பூட்டுதே.

சா. சரிதான் போ. [கிருஷ்ணன் போகிறான்.]

ரா. ஈசனே! பாவியேன் உமது பேரருளை அறியாது பல வாறு வெறுத்தேன், வெறுத்தேன்! மன்னியும்! மன்னியும்! [கண்ணீர் விடுகிறான்.]

சா. உம்!—போதும்,—நிறுத்து. நான் சொல்வதைக் கேள். அவள் வந்துவிடுவாள் சீக்கிரம். இதுவரையிலும் அவளை துக்கப்படும்படி செய்ததுபோதும்.—நீ அழுவதைக் கண்டு அவளை இன்னும் அழும்படிச் செய்யாதே.

ரா. சாமிநாதன், அம்மட்டும் சமயத்தில் வந்து தடுத்து, என்னுயிரையும், என்னுயிரினும் எனக் கினியதையும் அளித்தாய். உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்.

சா. அளித்த இரண்டையும் பட்சமுடன் பாதுகாப்பது தான். [வெளியில் மோட்டார் வண்டி சப்தம்.]
அதோ வந்துவிட்டாள்! கண்ணைத் துடைத்துக்கொள்.—நான் போய் அழைத்து வருகிறேன். அவள் வரும் பொழுது இந்த முகத்துடன் இருந்தாயோ அப்படியே அவளை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய்விடுவேன் நான். [போகிறான்.]

ரா. என்ன தப்பிதம் செய்ய விருந்தேன்! இப்படி யிருக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை! இதை முன்பே அறிந்திருந்தேனாயின் —

*பங்கஜவல்லியை மெல்ல அழைத்துக்கொண்டு சாமிநாதன் வருகிறான்*

சா. வெட்கமென்ன இன்னும்? வயித்தியரிடம் பேச வெட்க மில்லா திருந்தது. இப்பொழுது புருஷனைப் பார்க்க வெட்கமா யிருக்கிறதோ? — ராமசந்திரா!, இன்றைத் தினம் நீ பிறந்த தினமாகையால், அக் கடிதத்தில் எழுதியபடி சன்மானம் செய்யலாமென் றிருந்தேன். அந்த யோசனையை விட்டு இப்பொழுது வேறு யோசனை செய்கிறேன். இப்பொழுது நீ செய்யத் துணிந்த தப்பிதத்திற்கு, உன்னை விலங்கிற் பூட்டவேண்டும். இதோ உன் விலங்கு!
[பங்கஜவல்லியின் கரத்தை அவன் கரத்தில் வைக்கிறான்.]

ரா. இந்த விலங்கு வெறுக்கத் தக்கதன்றே! வேண்டி விரும்பத் தக்கதன்றோ இது!

ப. [தலை குனிந்து] இரண்டு வருஷங்களுக்கு முன்பாக வெறுத்த விலங்குதானே!

ரா. ஆமாம், உண்மையே. அப்பொழுது இவ் விலங்கு பொன்னாலாய தென்பதை அறிந்தேனில்லை. உலகில் ஆரியர்களுக் கெல்லாம் இப்படிப்பட்ட விலங்கே கிடைக்குமாக.

சா. அதுதான் கஷ்டம்.

ரா. கமலா.—

சா. இன்னும் கமலாவா? சொந்த பெய ரிட்டழைக்க இன்னும் இஷ்ட மில்லையா?

ப. எல்லாம் ஒன்றுதானே அர்த்தம்.

ரா. உண்மையே! நான் உனக்குச் செய்த பிழைகளை யெல்லாம் மன்னிப்பாய்.

ப. நான் இன்னுளென இதுவரையில்—உண்மையை—வெளி யிடாததை நீங்கள் மன்னிக்கவேண்டும்.

சா. சரிதான்; இதற்கும் அதற்கும் சரியாய்ப்போய்விட்டது, கடைசியில் ஆசாமி, தன்னைக் கொன்று கொள்ளப் பார்த்தானே, இதை யார் ம்ன்னிப்பது? பார்த்தையா இதை? நான் கொஞ்சம் பொறுத்து வந்திருந்தால் தெரிந்திருக்கும்!

ப. அண்ணா! நான் உமக்கு எத்தனை முறை சொன்னேன்! அப்படி யொன்று மிராது என்று என்னை அசட்டை செய்தீரே, பார்த்தீரா!

[அந்தப் புட்டியை எடுத்து வெளியில் எறிந்து விடுகிறாள்.]

சா. இதைவிட உனக்கு வேறென்ன தண்டனை வேண்டும்?

ரா. வேறொன்றும் வேண்டாம்.—சாமிநாதன், எனக்கொன்று மாத்திரம் சந்தேகம். பங்கஜவல்லி இறந்ததாக எனக்கேன் தந்தி யனுப்பினீர்கள்?

சா. ஏன், நேராக நீயே கேள். அதற்கு நான் சம்பந்தப் பட்டவனல்ல.

ப. உண்மையை வெளியிடுகிறேன். என்மீது கோபங் கொள்ளலாகாது. இரண்டு வருஷங்களுக்கு முன் நான்

பட்டணம் வந்திருந்தபொழுது, சமுத்திரக் கரையில் ஒரு நாள் நீங்கள்—மிஸ் கமலாவுடன்—பேசிக்கொண்டிருந்ததை அகஸ்மாத்தாய் செடி மறைவிலிருந்து கேட்டேன்—நான்உமது க்ஷேமத்திற்குக் குறுக்காயிருப்பதாக நீர் கூறியதை. உடனே என் தங்கை கமலா, வாந்தி பேதியில் இறக்கவே, அந்தத் தந்தியில் என் பெயரை எழுதி யனுப்பிவிட்டேன், நீங்கள் உமது இஷ்டப்படி சுகமா யிருப்பீர், என வெண்ணி.

ரா. சரியான தண்டனை! நமது செய்கைகளின் பலனை அனுபவிப்பதற்குவேறு உலகம் எதற்கு?

சா. வேதாந்தம் எல்லாம் அப்புறம் பார்க்கலாம். இப்பொழுது வயிற்று அந்தம் பார்ப்போம். வா, வீட்டிற்கு சாப்பாட்டிற்கு. [போகிறான்.]

ரா. ஈசனே! — பங்கஜவல்லி—

[பங்கஜவல்லி மெல்ல அருகில் வர, அவளை அணைத்து முத்த மிடுகிறான்]

சா. [கீழிருந்து] ராமசந்திரா! அழைத்துக்கொண்டு வருகிறாயா என்ன சீக்கிரம்?

ரா. இதோ வந்தேன்! [பங்கஜவல்லியை அழைத்துக் கொண்டு போகிறான்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

Printed at the 'Ratna Vilas Press,' 37, Erulappan Street, Madras.